சைவ வித்தியா விருத்திச் சங்க

# கருணை இல்லம்



பொன். தெய்வேந்திரம் மண்டபத்
திறப்பு விழாவும் சிலை திரைநீக்கமும்

## சிறப்பு மலர்



2019.02.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaha
noolaham.org | aava

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வித்தியா விருத்திச் சங்க

# கருணை இல்லம்

## பொன். தெய்வேந்திரம் நினைவு மண்டபத் திறப்பு விழாவும் சிலை திரைநீக்கமும்

# சிறப்பு மலர்

உரும்பிராய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | பொன். தெய்வேந்திரம் நினைவு மண்டபத் திறப்பு விழாவும் சிலை திரைநீக்கமும் சிறப்பு மலர் |
| வெளியீடு | : | சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, இலங்கை. |
| உரிமை | : | சைவ வித்தியா விருத்திச் சங்கம் |
| பதிப்பு | : | 02.02.2019 |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், திருநெல்வேலி. |
| பக்கங்கள் | : | xvi + 48 |

| | | |
|---|---|---|
| Souvenir | : | **Issued in commemoration of the opening of Pon. Theivendram Memorial Hall and the unveiling of his statue** |
| Publishers | : | Hindu Board of Education Kalasalai Road, Thirunelvely, SriLanka. |
| Copyright | : | with The Hindu Board of Education |
| Edition | : | 02.02.2019 |
| Printer | : | Guru Printers, Thirunelvely. |
| Pages | : | xvi + 48 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



கருணை இல்ல நிறுவுநர்

# பொன். தெய்வேந்திரம்

**20.03.1938 - 29.12.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# இந்துபோர்ட் சு. இராசரத்தினம்

**04.07.1884 - 12.03.1970**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக் கீதம்

**பல்லவி**

இறைவா நின் திருக்கோயில் வலம் வந்தோம் - உன்
இரு பாதம் துணை நம்பித் தொழுகின்றோம் (இறைவா)

**அனுபல்லவி**

நிறைவாழ்வு தரும் இல்ல நிழல் வந்தோம் - எம்
நினைவெல்லாம் ஈடேற விழைகின்றோம் (இறைவா)

**சரணம்**

அன்புக்கும் பரிவுக்கும் எமதில்லம் - ஆ
தரவற்ற சிறுவர்க்கும் எமதில்லம்
பண்புக்கும் ஒழுங்குக்கும் எமதில்லம் - எமைப்
பாலித்து நிறைவாழ்வு தருமில்லம் (இறைவா)

கலை கல்வி தொழில் யாவும் பயில் கோயில் - எமைக்
கண்காணித் துருவாக்கும் திருக்கோயில்
சிலையாக நிற்கின்ற மூதாதை - அந்த
தெய்வீக மனிதர் நம் வழிகாட்டி (இறைவா)

தொண்டுள்ளம் அன்புள்ளம் துணையாக - இளந்
தோளேந்தித் துணிவோடு நடக்கின்றோம்
என்றென்றும் எமதில்லம் நினைவெம்மை
ஈடேற்றும் எம் வாழ்வில் ஒளியேற்றும். (இறைவா)

ஆக்கம்:

**கவிஞர் சோ. பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியா விருத்திச் சங்க
# பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. V.T. சிவலிங்கம் |
| உபதலைவர்கள் | : | திரு.சோ.பத்மநாதன் |
| | | திரு. வி. ஸ்ரீசக்திவேல் |
| செயலாளர் | : | திரு. தி. செல்வமனோகரன் |
| உப செயலாளர் | : | கலாநிதி சி. பத்மராஜா |
| நிதிச் செயலர் | : | திரு. நா. நித்தியானந்தன் |

## திட்டப் பணிப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| இல்லம் | : | திருமதி சா. அருளானந்தம் |
| கல்வி | : | திருமதி. ச. சிவநாதன் |
| சமயம் | : | திருமதி நா.செல்வநாயகம் |
| பயிற்சி | : | திரு. ஆ. வ. கணேசலிங்கம் |
| பண்ணை | : | திரு. சு. சத்தியேந்திரன் |
| மருத்துவம் | : | வைத்திய கலாநிதி வி. வேதநாதன் |

## உறுப்பினர்கள்

கலாநிதி (திருமதி) க.இராமநாதன்
திருமதி. சி. ராதாகிருஷ்ணன்
செல்வி. வெ.விஜயபாரதி
திரு. ச. பத்மநாபன்
திரு. சு. பாலசண்முகநாதன்
திரு. அ. செந்திலிங்கம்
திரு. இ. பசுபதீஸ்வரன்
திரு. சி. சதாசிவம்
திரு. பொ. ஸ்ரீராமச்சந்திரன்
திரு. நா. கிருஷ்ணபிள்ளை
கலாநிதி சி. விஜயகுமார்
திரு. செ. ஜெயபாலசிங்கம்
திரு. இ. குகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிப்பாளர் சபை - 2018



இருப்பவர்கள் (இ - வ) : கலாநிதி.(திருமதி).க.இராமநாதன், திருமதி.சி.ராதாகிருஷ்ணன், திரு.இ.குகதாசன், திரு.ஆ.வ.கணேசலிங்கம் (பயிற்சி), Dr.வி.வேதநாதன் (மருத்துவம்), திரு.சோ.பத்மநாதன் (உபதலைவர்), திரு.தி.செல்வமனோகரன் (செயலாளர்), திரு.V.T.சிவலிங்கம் (தலைவர்), திரு.நா.நித்தியானந்தன் (நிதிச்செயலர்), திரு.வி.ஸ்ரீசக்திவேல் (உபதலைவர்), கலாநிதி.சி.பத்மராஜா (உபசெயலாளர்), கலாநிதி.சி.விஜயகுமார், திருமதி.சா.அருளானந்தம் (இல்லம்).

நிற்பவர்கள் (இ - வ) : திருமதி. ச. சிவநாதன் (கல்வி), திரு.இ.பசுபதீஸ்வரன், திரு. ச. பத்மநாபன், திரு.செ.ஜெயபாலசிங்கம், திரு.சு.பாலசண்முகநாதன், திரு.சி.சதாசிவம், திரு.சு.சத்தியேந்திரன் (பண்ணை), திரு.பொ.ஸ்ரீராமச்சந்திரன், திரு.அ.செந்திலிங்கம், திரு.நா.கிருஷ்ணபிள்ளை, திருமதி.நா.செல்வநாயகம் (சமயம்), செல்வி.வெ.விஜயபாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ் அநாதைகள் அறக்கட்டளை - இலண்டன்
## தலைவர்
## திருமதி வசந்தா தெய்வேந்திரன்
## அவர்களின்
# வாழ்த்துரை

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால்
கருணை இல்ல வளாகத்தில் நேர்த்தியாக
நிறுவப்பட்ட, புதிய ஆராதனை மண்டபத்
திறப்பு விழாவிற்கு இவ்வாழ்த்துச் செய்தியை
அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"அர்ப்பணிப்பு ஒன்று தான் சேவையின் அடித்தளமாகும்".

ஆதரவற்ற குழந்தைகளுக்கான
தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின்
கால் நூற்றாண்டுக்கதிகமான சேவைக் காலத்தில்,
மிகவும் சிறந்ததும் தனித்துவமானதுமானதும்
'கருணை இல்லம்' என்றால் அது மிகையானதல்ல
கருணை இல்லதிற்கு ஓர் ஆராதனை மண்டபமென்பது
சகல வசதிகளையும் கொண்ட,
தன்னிறைவில் முழுமை கண்ட,
சிறார்களின் இல்லமாகப் பூரணமாகிறது.

ஆராதனை மண்டப நிர்மாணத்தில்
கணிசமான ஒரு தொகையை
அறக்கட்டளை கொடுத்துதவ முடிந்ததையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.
குழந்தைகளின் தேவைகளே
எமது சேவை என்றியங்கும்
தமிழ் அநாதைகள் அறக்கட்டளை
எப்பொழுதும் சேவைக்குத் தயார்
என்பதனையும் இவ்விடத்தில்
பதிவு செய்ய விரும்புகிறேன்.
விசாலமானதும், பாதுகாப்பானதுமான
ஆராதனை மண்டபத்தில் சிறார்களின்,
நடனம், நாட்டிய, நாடக, இசைப் பயிற்சிகள்
மென்மேலும் முன்னேற்றம் காணும் என்பதில்
எவ்வித சந்தேகமும் இல்லை.

அளவில்லா அர்ப்பணிப்புடன்
ஆதரவுக் கரம் நீட்டி,
அன்புடன் அரவணைத்து,
உணவு, உடை, உறையுள் தந்து,
கல்வியும் புகட்டி, தொழிற் பயிற்சி தந்து
கனிவுடன் கூடிய கண்டிப்புடன்
ஆதரவற்ற சிறார்களை,
மாண்புற்ற மண்ணின் மைந்தர்களாக்கும்
சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரைப் பாராட்டி,
அவர்கள் சேவை மேலும் விரிந்து பரந்தோங்க
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கத் தலைவரின் வாழ்த்துரை

V.T சிவலிங்கம்
தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பல்வேறு பணிகளுள் ஒன்று சிறுவர் இல்லங்களை நடாத்துதலாகும். 2014.01.01 தொடக்கம் சங்கத்தோடு இணைந்த புதிய களமாக கருணை இல்லம் திகழ்கிறது. இவ்வில்லத்தை ஸ்தாபகம் செய்து நடாத்திப் பின்பு எம்மிடம் ஒப்படைத்த பெருமைக்குரியவர் உயர்திரு பொன்னம்பலம் தெய்வேந்திரம் அவர்களே. சகல வசதிகளுடனும் கூடிய இல்லத்தைச் சங்கத்திடம் ஒப்படைத்ததோடு இறைகதியும் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அன்னார் தான் பிறந்த தேசத்துக்கு அரும்பணி செய்தவர் என்பது யாவரும் அறிந்ததே. தமிழ்ப் பிரதேசங்களிலிருந்த இல்லங்கள், வறியவர்கள், நலிவுற்றோர் என ஏதேனும் ஒரு வகையில் பாதிக்கப்பட்ட வர்களாய் இருப்போர்க்குப் பல்வேறு வழிகளில் பல்வேறு உதவிகளைச் செய்தவர். அவரின் வழிகாட்டலில் உருவான TOT நிறுவனம், கனக துர்க்கை அம்மன் கோயில் போன்ற அமைப்புக்கள் இன்றும் தாயகம் எங்கும் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றன.

02.02.2019 அன்று கருணை இல்லத்திற் திறக்கப்படுகின்ற பொன்.தெய்வேந்திரம் நினைவு மண்டபத்துக்கும் கணிசமான நிதிப் பங்களிப்பை TOT நிறுவனம் செய்துள்ளமை நன்றியோடு சுட்டத்தக்கது. அன்னாரின் நினைவாக அழகிய மண்டபம் அமைக்கப்படுவதும் அதனுள் அன்னாரின் சிலையை நிர்மாணிப்பதுமான செயற்றிட்டம் எமது சபையின் காலத்தில் நடைபெற்றிருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இக் கைங்கரியத்துக்கு உடன் நின்ற அனைவருக்கும் மனங்கனிந்த நன்றியும் வாழ்த்துக்களும் உரியதாகுக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீள நினைந்து எழுதுதல்

தி. செல்வமனோகரன்
செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

2012 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 02ஆந் திகதி மதியப் பொழுது; நான் சங்கப் பணியில் ஈடுபட்டிருந்தேன். சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் என்னை அணுகி 'கருணை இல்ல ஆக்கள் வந்திருக் கினம் நீங்கள் ஒருக்கா அவையோட கதைச்சா நல்லம் சேர்" என்று கூறினார். நானும் அலுவலகத்தில் அவர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்றேன். மிக அழகான தம்பதியினர் அமர்ந்திருந்தனர். பரஸ்பரம் அறிமுகமாகி உரையாடினோம். இல்லம் பார்க்க விரும்பினார்கள். அழைத்துச் சென்றேன். இல்லங்கள், அவற்றை நடத்துவதில் எதிர் நோக்குகின்ற சவால்கள், நடைமுறைப் பிரச்சினைகள், பொருளாதாரம் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாக உரையாடினோம். பெண்கள் இல்லப் படிப்பு மண்டம் அதன் அமைப்பியல் - மழை, வெயில், குளிர் என்பவற்றால் அம்மண்டபம் கற்றலுக்குகந்ததல்லாததாய் இருத்தல் பற்றி அவருக்கு எடுத்துரைத்தேன். 'என்ன செய்ய நினைக்கிறீர்கள்' என வினவினார். 'யாரேனும் உதவினால் இதனைப் புனரமைக்கலாம் அல்லது இடித்தழித்துப் புதியது கட்டலாம்' எனக் கூறினேன். 'இரண்டு திட்டங்க ளையும் உங்களுடைய எந்திரியுடன் கதைத்துவிட்டு எது நல்லது என முடிவெடுங்கள். நான் என்னாலான உதவி செய்கின்றேன்' என்றார். கட்டட அமைப்புத் தொடர்பாகத் தொடர்ந்தும் உரையாடினோம்.

சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட (பெண்கள் இல்லத்துக்கு வடதிசையில் உள்ள) காணியைக் காட்டியபோது மிகவும் பாராட்டினார். இவ்வாறான செயற்பாடு முக்கியமானது என்றும் கூறினார். (எமது புத்தி ஜீவிகளுட் சிலர் நாம் காணி வாங்கியது தவறென்று உரைத்தமையும் சுட்டத்தக்கது) அவர் தந்த உற்சாகத்தால் இன்று அந்தக் காணி S.R. கனகநாயகம் பூங்காவாகத் திகழ்கிறது. பின்பு ஆண்கள் இல்லத்தையும் சுற்றிப் பார்த்தோம். இல்லத்தின் பண இருப்பு, மாதாந்தச் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக உரையாடினோம். 'உங்களுக்கு வரும் பணவருவாய் ஒரு காலத்தில் நின்றுவிட்டால் என்ன செய்வீர்கள்'? என வினவினார். என்னிடம் அந்தக் கேள்விக்குப் பதிலில்லை. திகைப்பு மட்டுமே இருந்தது. இன்றும் அது கேள்வியாகவே இருக்கிறது. அவர் நன்றி தெரிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

ஒரு வாரம் கழித்து தொலைபேசி அழைப்பு வந்தது. அதே குரல் 'நீங்கள் கட்டடம் ஆரம்பிக்கக் கொஞ்சம் பணம் அனுப்பியிருக்கிறேன்' என்றார். நன்றி தெரிவித்தேன். பெண்கள் இல்லத்தில் இன்றிருக்கும் புதிய கட்டடம் அவர் தந்த பணத்தை அச்சாரமாகக் கொண்டே கட்டடப் பட்டது. கட்டடப் படங்கள், நாள் அத்திபாரம் இடல் எனக் கட்டடம் முடியும் வரை, படங்கள் தொடர்ந்து எடுத்தனுப்பிக்கொண்டிருந்தோம். அவரும் தன் அபிப்பிராயங்களைக் கூறிவந்ததோடு கட்டடம் முடிவுற்றபோது ஏறத்தாழ ரூபா 1,372, 521.60/- ஐ அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிறிதொருநாள் திடீரெனத் தொலைபேசி அழைப்பு வந்தது. உங்கள் சங்கத்திலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவுக்குள் ஒரு இல்லம் இருக்கிறது. உங்களிடம் பொறுப்புத் தந்தால் நடத்துவீர்களா?' என வினவினார். "ஆம்" எனத் தெரிவித்தேன். அது எந்த இல்லம் என வினவினேன். பிறிதொருநாள் கூறுகிறேன் என்றார். தொடர்ந்தும் உரையாடினோம். பிறிதொருநாள் 'கருணை இல்லத்தைப் பொறுப் பெடுக்கிறீர்களா?' என வினவினார். மகிழ்வோடு விருப்பம் தெரிவித்த தோடு சங்கத் தலைவர் திரு. சோ. பத்மநாதன் அவர்களுடன் உரையாடு மாறு கூறி தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தேன். உரையாடல்கள் நீண்டன. சங்கத்திலும் அனுமதி பெறப்பட்டது.

தனது சகோதரி திருமதி புனிதவதி விவேகானந்தன் அவர்களுக்கு அற்றோணித் தத்துவம் அனுப்பினார். 28.12.2013 அன்று ஜனாதிபதி சட்டத் தரணி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் முன்னிலையில் கருணை இல்லம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குக் கையளிக்கப்பட்டது. தன் மகிழ்வைத் தொலைபேசியில் எங்களோடு பகிர்ந்து கொண்டார். மறுநாள் பிரித்தானிய தேசத்தில் அவரின் உயிர் பிரிந்தது. இக்கைங்கரியத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவே காத்திருந்தார் என நாம் எல்லோரும் நினைத்தோம். 'நல்லார் செயல் என்றும் நன்மையே பயக்கும், என்பதன் விளக்கம் இவர் தம் வாழ்வாகும்'.

மீள நினைக்கிறேன். வெள்ளை நிறம், வெள்ளையாடை, வெள்ளை முடியும் மீசையும், எக்காலமும் மகிழ்சியோடு சிரித்த முகம் அருகில் பட்டாடையோடு மங்கலகரமான பெண்மணி, இதுவே இவர்கள் பற்றிய என் மனப்பதிவு. திரு.திருமதி பொன்.தெய்வேந்திரம் தம்பதியினர். சிறியன சிந்தியாத அற்புத மனிதர்கள் அவர்கள்.

கருணை இல்லத்தை சங்கம் பொறுப்பேற்று முழுமையாக 4 வருடங்கள் நிறைவடைந்து ஐந்தாம் வருடத்துள் கால் பதித்துள்ளோம். தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையோடு 'பொன்.தெய்வேந்திரம் நினைவு மண்டபம்.' கவினுறக் கட்டி முடிக்கப்பட்டு இன்று திறக்கப்படுகிறது. அத்தோடு சங்கம் அன்னாரின் மேன்மைமிகு பணிகளை மனதிற்கொண்டு அவரின் திருவுருவச் சிலையை மண்டபத் துக்குள் ஸ்தாபித்து திறந்து வைக்கின்றது. இதன் மூலம் தன் நன்றியத லைத் தெரிவிப்பதோடு மகிழ்வும் கொள்கிறது.

இம்மாமனிதனை ஒரோயொரு நாளே தரிசித்து தொலைபேசி உடையாடலினூடாக அணுக்கமாகும் வாய்ப்புக் கிடைத்தமை, எனது பெரும்பேறு. அவர்தம் பாரியார் திருமதி. வசந்தராணி தெய்வேந்திரம் அவர்களுடன் உரையாடியதன் விளைவே இம்மண்டபம். இதனை அவரே திறந்து வைப்பது என்பது மிக்க மகிழ்ச்சியான நிகழ்வாகிறது. அவருக்கு மிக்க நன்றி. TOT நிறுவனம் சார்ந்த மதிப்புக்குரிய திருமூலன், இந்திரகுமார் உள்ளிட்ட அனைத்து உள்ளங்களுக்கும் மிக்க நன்றி. பொன். தெய்வேந்திரம் அவர்களின் புகழ், வானம் உள்ளளவும் வாழும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரிடம் நாங்கள் போக?

கவிஞர் சோ.பத்மநாதன்
உபதலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

நோதலும் இழப்பும் போரால்
நுவலரும் துன்பம் உற்றுச்
சாதலும் விதியாய்ப் போன
தமிழரை நினைந்து நீசெய்
ஈதலும் வலக்கை செய்வது
இட(து) அறியா தவாறு
போதரக் கண்டோம் ஐயா!
புகழைநீ நாட வில்லை!

நோயுனை வாட்டும் போதும்
நொடிந்தவர் தமைக்கை தூக்க
ஆயிரம் அறங்கள் செய்வது
அன்றி வேறு ஏதும் எண்ணாய்
தாய் தந்தை அற்ற பிள்ளை
இல்லாத உலகைக் காண
நீயிங்கு சூழ்ந்த தெல்லாம்
நினைந்து நெஞ்சுருகு கின்றோம்.

தெய்வம் நீ இருக்கின்றாய் நாம்
செய்பணி இனிது முற்றும்,
உய்வம் என்றிருந்தோம் ஆனால்
ஓய்ந்ததுன் மூச்சுஎன் கின்றார்
செய்வதொன் றறியா திங்கு
திகைக்கின்றோம் பணி முடிந்தா
ஐய வானுலகு சென்றாய்?
ஆரிடம் நாங்கள் போக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# He who understands his duty to society truly lives….

Mr Theivendram was born on the 20th March 1938, the second child of seven and the eldest son of Mr.Ponnampalam and his wife Masilamani. His early life was quiet as his father was a proud but humble farmer in Urumpirai. He assumed an early sense of responsibility for his siblings – helping his father harvest and sell crops at the local market before school. It was this sense of duty instilled at a young age that would guide him so well through the rest of his life.

After studying at Urumpirai Hindu College, he decided that a better life awaited elsewhere. In 1959, following a brief stint in Malaysia, he decided to pursue the opportunities that lay in the UK, a land in where he was a total stranger. He was not fluent in the language; nor was he familiar with the country. He decided to move in 1961 and after travelling by ship for 3 weeks he arrived in the UK. Housing and social conditions were tough at the time. "No coloureds" signs in windows were common, the culture was different and the food was bland. However after a few months , he eventually settled in Ealing. This decision, to move to the UK, not only defined his direct descendants but also paved the way for many others to be able to make the long journey to the UK. Being one of the earliest, he used the experience he had gathered to guide, support and reassure many other men. He soon began working at the Metropolitan Police as an electrical technician. However the sense of incompleteness was strong. He began saving money for a plane ticket back to Sri Lanka and in 1965 he took his beloved Vasantharany, a close childhood friend and neighbor as his wife. They travelled back to London together and soon after, welcomed their child Anuratha into the world closely followed by their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

first son Anuraj. With family life blossoming. He began focusing on his career. To survive in those days means to work, work and work more. He took two jobs and at times three, as a driving instructor in the early mornings and evenings. In 1976, the family moved away from their Ealing home and to a new home in Greenford where a few years later their child Arunan was born.

The 1983 riots in Sri Lanka would have a deep and significant impact on all Sri Lankans at home and abroad. Following the violence in his homeland he felt he could not ignore the many thousands of Children that had been orphaned and displaced. He wanted to give comfort and the opportunity for a better life to those left destitute. It became clear to him that basic necessities were needed to improve the quality of lives for thousands of peoples. So in 1986 he approached a few friends and together they formed the Tamil Orphans Trust (TOT). Later that year, during the early stages of the brutal war, at a time when people were being warned not to visit Sri Lanka he travelled to the North and East to witness the extent to which his beloved home country had been affected. He witnessed desperate and heart-breaking scenes, which further galvanised his sprit to help. He understood that several children's homes in the region had been destroyed, and thousands of Children were struggling to begin their lives amidst violence and poverty, with this in mind, the charity focused its energies on providing food, clothing and shelter for the most vulnerable. Over the years, as the charity grew in size, it was able to provide land for Children's homes and financial support for various projects. For the children involved, it provided comfort, family and a sense of belonging in a caring environment. A key aspect and one of high importance to him was to encourage the Children's homes to be self-sufficient so that they did not have to depend on charity. He was keen to emphasise that the TOT does not have any racial, religious or political affiliations. Rather, it was an organization set up to help children ravaged by the war to give them a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

measure of the opportunities his own children had. Various methods of fund- raising were tried and tested- musical functions, clothes drop-offs, the annual TOT Calendar sales all of which enabled the TOT to help hundreds of orphans. He and his wife visited the orphanages that were being supported in Northern and Eastern Sri Lanka including the one close to his heart – Karunai Illam which was fully supported by the TOT. We know he was very grateful for all the support and commitment of the community to follow his vision, many of whom became lifelong friends.

He was always a spiritual man and regularly visited Highgate Murugan temple in North London. Another desire of his would lead him to invite a few other likeminded religious friends to realise together the dream of setting up the first temple in West London. The temple, he explained, was not only for prayer but to offer the chance to gather for charity and to offer a community for the growing Tamil population in West London. After consulting Swami Siva chariar Sambamoorthy who blessed the idea and suggested the name, the inauguration of the Kanaga Thurkai Amman Temple took place on 10th August 1991 at the Honeybun center, Harrow. As devotees increased over time, the temple moved to Shackleton Hall in Southall following which the deity donated from Wimbledon Shree Ghanapathy temple was housed with him until a permanent Amman temple was able to move to its permanent home on Chapel Road, Ealing. From its inception, he had been a trustee and had been deeply involved in decision-making at the temple, guiding it along in the correct direction even up to his last few months. He acted with the best interests of the temple at heart, not seeking the spotlight, although it often found him. He was also always very encouraging of others and did not shy away from responsibility. Never one to sit back and let the job take care of itself, his determination and hard work will always remain a foundation of the Ealing Amman Temple.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thoughout his life his wife remained unwavering in loyalty by his side, they spoke on every subject and she was his closest and most trusted friend and confidante. In 2006 his fighting spirit was again put to the test as he suffered a severe heart attack. Doctors at the time said they were amazed that he survived with no life debilitating side effects. This led to bypass surgery and in his typical style became friends with the surgeon who had saved his life. His final year was dogged by a deterioration of health. However with each hospital visit, he showed tremendous vitality to keep getting back up and keep on fighting.

He was decent, kind and a selfless person and to the end he remained a stalwart of the Tamil community for which he sacrificed so much. He never fully recognized himself as the quietly inspirational figure he was to so many.

Courtesy : ***Ponmana Chelvar***

**கருணை இல்ல**
**சிறுவர் அபிவிருத்தி நிலைய**
**முகாமைத்துவக்குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி சா. அருளானந்தம் |
| உப தலைவர் | : | திருமதி சி. ராதாகிருஷ்ணன் |
| செயலாளர் | : | செல்வி வெ. விஜயபாரதி |
| உப செயலாளர் | : | திருமதி நா. செல்வநாயகம் |
| நிதிச் செயலர் | : | திரு. இ. குகதாசன் |
| உறுப்பினர் | : | திரு சோ.பத்மநாதன் |
| முகாமையாளர் | : | செல்வி த. யாலினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை இல்ல அபிவிருத்தி நிலைய முகாமைத்துவக் குழு



கருணை இல்ல அபிவிருத்தி நிலையப் பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயற்பாடுகள்

ஈழத்தில் சைவமும் தமிழும் காக்க சேர். பொன்.இராமநாதன் தலைமையில் 1923.12.09 அன்று ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆகும். இச்சங்கம் 1960களின் தொடக்கம் வரை 187 நிறுவனங்களை (பாடசாலைகள், ஒரு சைவாசிரியர் கலாசாலை, தொழிற்பயிற்சி நிலையங்கள், இரு சிறுவர் இல்லங்கள்) நடாத்தியது. பாடசாலைகளையும் சைவாசிரியர் கலாசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின் சங்கம், இரு சிறுவர் இல்லங்களை மட்டும் நிர்வகித்து வந்துள்ளது.

## நிர்வாகம்

இச்சங்கம் தலைவர், செயலாளர், நிதிச் செயலர் உள்ளிட்ட இருபத்தைந்து பணிப்பாளர்களைக் கொண்ட சபையால் நிர்வகிக்கப் படுகிறது. இவர்களுள் இல்லம், கல்வி, மருத்துவம், சமயம், பண்ணை, தொழிற்பயிற்சி, எனும் ஆறு முக்கிய விடயங்களுக்கு உரிய திட்டப் பணிப்பாளர்களும் உள்ளடங்குவர். பொதுச்சபையே இப்பணிப்பாளர் சபையை நியமிக்கின்றது. இப்பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் ஊதியம் பெறாது சேவை மனப்பான் மையோடு தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இங்கு நிர்வாக அலுவலர் ஒருவர், முகாமைத்துவ உதவியாளர் ஐவர், அலுவலக உதவியாளர் ஒருவர், தையற் பயிற்சி ஆசிரியர் ஒருவர், நூலகர் ஒருவர், அறிவகப் பணியாளர்கள் இருவர், விடுதிக்காப்பாளர் இருவர், உப விடுதிக் காப்பாளர் ஏழு பேர், சிற்றூழியர் ஒருவர், இரவு கல்வி மேற்பார்வையாளர் ஒருவர், சாரதி ஒருவர், காவலாளிகள் அறுவர், சமையலாளர்கள் நால்வர் என அமைந்த ஆளணியினர் சங்கச் செயற்பாடுகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு உதவி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் பணிகள்

இப்பொழுது சங்கம் பல்வேறு பணிகளை சமூகத்தின் தேவைக் கேற்ப முன்னெடுத்து வருகின்றது. தற்போது எமது சங்கத்தால் கீழ்வரும் இல்லங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

i. சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையம் (ஆண்)

ii. சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையம் (பெண்)

iii. கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையம் (பெண்)

எமது சங்கம் ஆரம்ப காலம் (1928) தொட்டே இரு சிறுவர் இல்லங்களை கலாசாலை வீதி, திருநெல்வேலியில் நடத்தி வருகிறது. அவற்றுள் ஒன்று ஆண்கள் இல்லமாகவும் மற்றையது பெண்கள் இல்லமா கவும் விளங்குகின்றன. ஆண்கள் இல்லத்தில் தற்போது 54 ஆண் பிள்ளைகளும் பெண்கள் இல்லத்தில் தற்போது 100 பெண்பிள்ளைகளும் தங்கியுள்ளனர். உரும்பிராயில் இயங்கி வரும் கருணை இல்லத்தில் தற்போது 31 பெண்பிள்ளைகள் தங்கியுள்ளனர்.

## மாணவர் அனுமதி

சிறுவர் நன்னடத்தைப் பிரிவினராலும் நீதிமன்றத்தாலும் இல்லங்களுக்குச் சிறுவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது திருநெல்வேலி சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தராக திரு.A.றெஜினோல்ட் ராஜ் அவர்களும் உரும்பிராய் கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு நன்னடத்தை உத்தியோகத் தராக திரு.K.கமலதாசன் அவர்களும் தொழிற்படுகின்றனர். இவர்கள் தமக்குரிய நிகழ்ச்சி நிரலின்படி தத்தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர்.

## கல்விச் செயற்பாடுகள்

இரு சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த சிறார்கள் யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்றனர். கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியுள்ள சிறார்களில் 11 பேர் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியால யத்திலும், 20 பேர் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயில்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்புக்கள்

சிறுவர் அபிவிருத்தி நிலையச் சிறார்களுக்கான அனைத்துப் பாடங்களுக்கும் பிரத்தியேக வகுப்புக்கள் அவ்வவ்வில்லங்களில் நடைபெற்று வருகின்றன. தத்தம் பாடத்துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இவ்வகுப்புக்களில் இணைப்பாட விதானங்களும் கவின்கலை வகுப்புக்களும் உள்ளடங்கு கின்றன. இப்பிரத்தியேக வகுப்புச் செயற்பாட்டிற்கு ஏறத்தாழ ரூபா 150,000த்திற்கு மேல் செலவாகின்றமை குறிப்பிடத்தக்கது. சைவச் சிறுவர் அபிவிருத்தி இல்லங்களுக்கு வருகை தந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர் விபரம்:-

## கருணை இல்லம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்

**ஆரம்பப் பிரிவு** - திருமதி S.நிலுசியா

**இடைநிலைப் பிரிவு**

| | | |
|---|---|---|
| கணிதம் | - | திரு. இ. கிருஷ்ணமேனன், திரு. T. யசோதரன் |
| தமிழ் | - | திருமதி கௌரி முகுந்தன் |
| நடனம் | - | திருமதி யா. ரதீஸ்வரன் |
| விஞ்ஞானம் | - | திரு. இ. சந்தர்ராஜ், திரு. லோ. துஷிகரன் |
| புவியியல் | - | செல்வி வி. குசலா |
| வரலாறு | - | திருமதி. கௌ. நந்தினிதேவி |
| குடியுரிமை | - | திருமதி. கௌ. நந்தினிதேவி |
| ஆங்கிலம் | - | செல்வி தே. பவித்திரா |
| சமயம் | - | திருமதி . T. ஜீவிகா |
| சங்கீதம் | - | திருமதி. இ. தயாபரன் |

### உயர்தரப் பிரிவு

| | | |
|---|---|---|
| தமிழ் | - | திருமதி கௌரி முகுந்தன் |
| இந்துநாகரிகம் | - | திரு.P.திருக்குமரன் |
| பொருளியல் | - | திரு. வை. ரவிச்சந்திரன், செல்வி செ. ராஜினி |
| சங்கீதம் | - | திருமதி இ. தயாபரன் |
| நாடகமும் அரங்கியலும் | - | திரு. K. மங்களேஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| புவியியல் | - | செல்வி V. குசலா, திரு. S. ராஜராஜேஸ்வரன் |
| வீணை | - | செல்வி. வெ. விஜயபாரதி |

## கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலைய மாணவர்களது கல்வி, இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் சாதனைகள் (01.06.2017 - 31.05.2018)

### கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையம்

| 2017 | G.C.E (A/L) |
|---|---|
| 1. இ. விஜிதா | C2S |

| 2018 | G.C.E (A/L) |
|---|---|
| 1. ஜெ. டக்சனா | 2AB |
| 2. பி. யாழினி | 3B |
| 3. மு. டக்சா | BCS |

| 2017 | G.C.E (0/L) |
|---|---|
| 1. ஜெ. ஜெனிற்றா | A,B,2C,3S |

21.10.2017, 22.10.2017 ஆகிய திகதிகளில் கராத்தே சம்மேளம் நடாத்திய மாகாண மட்ட கராத்தேப் போட்டியில் 08 சிறார்கள் பங்குபற்றி 12 பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

| | | | |
|---|---|---|---|
| க. டிலக்சனா | குமித்தே | - | Excellent Performance |
| யூ. சிந்தியா | குமித்தே | - | Excellent Performance |
| ப. சாதனா | குமித்தே | - | Excellent Performance |
| த. டிசாளினி | குமித்தே | - | Excellent Performance |
| ம. சாருபா | குமித்தே | - | 2ஆம் இடம் |
| செ. தனுசிகா | குமித்தே | - | 3ஆம் இடம் |
| பா. நாகரூபி | காட்டா | - | 3ஆம் இடம் |
| | குமித்தே | - | 2ஆம் இடம் |
| காட்டா (குழு) | | - | Excellent Performance |
| ஜெ. கீர்த்தனா | குமித்தே | - | 1ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டா - 3ஆம் இடம்

காட்டா (குழு) - Excellent Performance

* 11.11.2017, 12.11.2017 ஆகிய திகதிகளில் தேசிய மட்ட கராத்தேப் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற சிறுமி விபரம்:

ஜெ. கீர்த்தனா - குமித்தே - 2ஆம் இடம்

* வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் - 2017

வாய்ப்பாட்டு :

த. நதீபா - 2ஆம் பிரிவு

04.02.2018 அன்று வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தினரால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் :

கோலம் போடுதல் - கீழ்ப்பிரிவு

க. டிலக்சனா - C

கோலம் போடுதல் - மத்திய பிரிவு

த. டிசாளினி - C

சே. சுதர்சனா - C

2018ம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் சித்தியடைந்தோர் விபரம் :

வீணை - தரம் 2

செல்வி சி. கீதா - 1ஆம் பிரிவு

வாய்ப்பாட்டு - தரம் 2

செல்வி ப. சசிகலா - 2ஆம் பிரிவு

நடனம் - தரம் 3

செல்வி பி.யாழினி - 1ஆம் பிரிவு

வாய்ப்பாட்டு - தரம் 3

செல்வி ப. சாதனா - சாதாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சே. சுதர்சனா - 2ஆம் பிரிவு
செல்வி சி. கீதா - 1ஆம் பிரிவு

19.10.2018 அன்று யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் மற்றும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய இல்லச் சிறுமிகளின் விபரம் :

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

தரம் 5

| | | |
|---|---|---|
| செல்வி த. ஜித்திகா | கோலம் | 1ஆம் இடம் |

தரம் 6

| | | |
|---|---|---|
| செல்வி யூ. சிந்தியா | பாமாலை | 3ஆம் இடம் |

தரம் 8

| | | |
|---|---|---|
| செல்வி த. டிசாளினி | கோலம் | 1ஆம் இடம் |
| செல்வி சே. சுதர்சனா | கோலம் | 2ஆம் இடம் |
| | பாமாலை | 2ஆம் இடம் |
| செல்வி ப. சாதனா | பாமாலை | 3ஆம் இடம் |
| செல்வி ம. துசியந்தி | கோலம் | 3ஆம் இடம் |

தரம் 9

| | | |
|---|---|---|
| செல்வி ச. சர்மிலி | கோலம் | 1ஆம் இடம் |
| செல்வி ர. நந்தினி | கோலம் | 2ஆம் இடம் |

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

தரம் 8

| | | |
|---|---|---|
| செல்வி ஜெ. ஜெகதா | பாமாலை | 1ஆம் இடம் |
| | கோலம் | 2ஆம் இடம் |

தரம் 10

| | | |
|---|---|---|
| செல்வி த.தனுசியா | பாமாலை | 1ஆம் இடம் |

உயர்தரம் 2019

| | | |
|---|---|---|
| செல்வி சி. கீதா | பாமாலை | 1ஆம் இடம் |
| செல்வி ஜெ. கீர்த்தனா | மாலை கட்டுதல் | 1ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செல்வி ப. சசிகலா | கோலம் | 2ஆம் இடம் |
| | மாலை கட்டுதல் | 2ஆம் இடம் |
| செல்வி பா.நாகரூபி | பேச்சு | 1ஆம் இடம் |
| | கோலம் | 1ஆம் இடம் |

*** கவின்கலை வகுப்புக்கள்**

சிறார்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக சங்கீதம், பண்ணிசை, வயலின், வீணை, நடனம், நாடகம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதன் மூலம் மாணவர் மன்றங்கள், இல்ல நிகழ்வுகள் மற்றும் பாடசாலை, பொது நிகழ்வுகளிலும் சிறார்கள் தமது கலைசார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்தோடு வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் கவின்கலை சார்ந்த பரீட்சைகளிலும் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.

*** தொழிற்பயிற்சிகள்**

அனைத்துச் சிறார்களுக்கும் இல்லங்களிலேயே தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

*** கணினிப் பயிற்சி**

சிறார்களைத் தொழில்நுட்ப உலகிற்கேற்பத் தயார்படுத்தும் முகமாக கணினிப் பயிற்சி வழங்கப்படுகின்றது. அடிப்படைக் கணினி அறிவோடு நெனசல ஊடாக ஒரு கற்கைநெறியும் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

*** விவசாயப் பயிற்சி**

வீட்டுத்தோட்ட அமைப்பில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்செயற்பாடுகளில் சிறார்கள் ஈடுபடுவதனூடாகத் தமக்குரிய விவசாயப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

*** தையற் பயிற்சி**

பெண் பிள்ளைகளுக்கான தையற் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இல்லப் பிள்ளைகளுக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைகள் இங்கேயே தைத்து வழங்கப்படுகின்றன. இல்லத்திலிருந்து விலகிய மற்றும் ஊர்ப் பெண் பிள்ளைகளுக்குத் தையற்பயிற்சி வழங்கப் படுகின்றன. முதலாவது குழு தையற் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளது. அத்துடன் NATTA நிறுவனத்துடன் இணைந்த பரீட்சைகளும் நடாத்தப் பட்டுச் சான்றிகழ்கள் வழங்கப்படுகின்றன.

*** மாணவர் மன்றம்**

மாதந்தோறும் பௌர்ணமி நாளில் மாணவர் மன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதில் சிறார்களின் பேச்சு, கவிதை, பாடல், நாடகம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதனூடாகச் சிறார்களின் ஆளுமை விருத்தி செய்யப்படுகின்றது.

*** கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | செல்வி பா. நாகரூபி |
| உபதலைவர் | - | செல்வி க. நாகதர்சினி |
| செயலாளர் | - | செல்வி ப. சசிகலா |
| உபசெயலாளர் | - | செல்வி ஜெ. ஜெனிற்றா |

*** வகுப்புப் பிரதிநிதிகள் :**

| | | | |
|---|---|---|---|
| தரம் 7 | - செல்வி யூ. சிந்தியா | தரம் 8 | - செல்வி க. டிலக்சனா |
| தரம் 9 | - செல்வி ப. சாதனா | தரம் 10 | - செல்வி ர. நந்தினி |
| தரம் 11 | - செல்வி செ. தனுசிகா | தரம் 12 | - செல்வி ஜெ. கீர்த்தனா |

*** சைவ மன்றம்**

சமய நிகழ்வுகள் யாவற்றையும் பொறுப்புடன் நடாத்தி வருவது இம்மன்றமாகும். சைவச் சிறுவர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை தோறும் ஆசிரியர் திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள் சமயச் சொற்பொழிவை ஆற்றி வருகின்றார்.

*** கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | செல்வி சி. கீதா |
| உபதலைவர் | - | செல்வி பா. நாகரூபி |
| செயலாளர் | - | செல்வி ஜெ. கீர்த்தனா |
| உபசெயலாளர் | - | செல்வி ப. சசிகலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** வகுப்புப் பிரதிநிதிகள் :**

தரம் 7 - செல்வி த. உதயகிருசாளினி
தரம் 8 - செல்வி க. டிலக்சனா
தரம் 9 - செல்வி த. டிசாளினி
தரம் 10 - செல்வி ம. சங்கீதா
தரம் 11 - செல்வி த. தனுசிகா
தரம் 12 - செல்வி ஜெ. ஜெனிற்றா
தரம் 13 - செல்வி க. நாகதர்சினி

*** விளையாட்டு**

பெண்களுக்கான தற்காப்புக் கலை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

*** சுற்றுலா**

சிறார்கள் வருடத்தில் இருமுறை சுற்றுலா அழைத்துச் செல்லப் படுகின்றனர். 2018 ஆவணி மாதத்தில் ஆகிய பொலனறுவை, தம்புள்ளை, சிகிரியா, திருகோணமலை துறைமுகம், கன்னியா வெந்நீரூற்று ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

*** பெற்றோர் /பாதுகாவலர் ஒன்றுகூடல்**

வருடந்தோறும் ஆவணி மாத நடுப்பகுதியில் பெற்றோர் / பாதுகாவலர் ஒன்றுகூடல் நடைபெறுகின்றது. இதில் நிர்வாகம் சார்ந்த அனைவரும் கலந்து கொள்வர். ஏனைய காலங்களில் பெற்றோர் /பாதுகாவலர் மாதமொரு முறை மட்டும் இல்லச் சிறார்களைச் சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

*** சேவையடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்**

செல்வி வெ.விஜயபாரதி அவர்கள் ஊதியமின்றி எமது சிறார்களுக்கு வீணை வகுப்புக்களை நடாத்தி வருகின்றார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

*** உயர்கல்வி மாணவர்களுக்கான நிதியுதவி**

பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், வெளிவாரிக் கற்கைநெறி என்பவற்றை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சங்கம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான நிதியுதவியை மாதாந்தம் வழங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * நூலகம்

எமது சங்கம் சிறந்த நூலக வசதிகளைச் சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## * சமய நிகழ்வுகள்

சிவராத்திரி, நவராத்திரி, நாயன்மார் குருபூசைகள், அறநெறி நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை தோறும் பிரசங்கம் நாள்தோறும் காலையும் மாலையும் வழிபாடு என்ற வகையில் இல்லங்களில் சமய நிகழ்வு இடம் பெறுகின்றது. சிவராத்திரி தினத்தன்று சிறார்களுக்கு தீட்சை வழங்கப்படு கிறது. நவராத்திரி தினங்களில் பிரசங்கங்கள் இடம்பெறுகின்றன. அத் தோடு சிறார்களுக்கிடையே கோலம் போடுதல், பாமாலை, பேச்சு முத லான போட்டிகள் நடாத்தப்பட்டு விஜயதசமி அன்று பரிசில்கள் வழங்கப் படுகின்றன. அருகிலுள்ள ஆலயங்களாலும் மற்றும் சமய நிறுவனங்க ளாலும் நடாத்தப்படுகின்ற போட்டிகளில் சிறார்கள் பங்குபற்றி வருகின் றனர். அத்தோடு சங்கத்தால் இந்து கலாசார அமைச்சின் அறநெறிப் பாடசாலை நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்து கலாசார அமைச்சின் அறநெறிப் பாடசாலை நடாத்தும் போட்டிகளுக்கும் சிறார்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

## * விழாக்கள்

தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி, கார்த்திகை விளக்கீடு போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக சித்திரைப் புத்தாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 2014இல் இலிருந்து வருடந்தோறும் விடுதிக் காப்பாளர் தினம் ஒக்டோபர் 06 ஆம் திகதியில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதேபோல ஆசிரியர் தினமும் வருடாவருடம் கொண்டாடப்படுகிறது.

## * ராஜா பிளாசா வீட்டுத் திட்டம்

திரு.இ.குவேந்திரநாதன் அவர்களால் எமது இல்லத்திலிருந்து கல்வி கற்ற சிறுமி செல்வி மு. டக்சா என்பவருக்கு வீடு கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது. அவரது பணிகள் தொடர வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** அறநெறிப் பாடசாலை**

இப்பாடசாலையில் மூன்று ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றார்கள். இல்லச் சிறார்கள் பரீட்சையிலும் ஏனைய போட்டிகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றார்கள்.

*** சங்கத்துக்குக்கிடைத்த விருதுகள்**

2016க்கான தேசிய சேவை மேன்மை விருதுகள் எனும் வகைமையில் சிறந்த அறநெறிப் பாடசாலைக்கான விருது எமது சங்கத்துக்குக் கிடைத்துள்ளது.

நாவலர் வழியில் சைவத்திற்கும் தமிழிற்கும் சமூகத்திற்கும் சங்கம் ஆற்றிவரும் அரும்பணிக்காக இந்து கலாசார அமைச்சினால் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு விருது - 2017"எமது சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

*** என்றும் எமது நன்றிகள்**

வடமாகாண ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், அரச அதிபர், கோப்பாய் பிரதேச செயலர், மாவட்ட உள சமூக இணைப்பாளர், மாவட்ட சிறுவர் அதிகாரசபை, நீதி மன்றங்கள், பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர்கள் மற்றும் ஆதரவுக்கரம் நீட்டும் அனைத்து அன்புள்ளங்கள் யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு தங்களினதும் சைவத்தமிழ் உலகினதும் அன்பையும் ஆதரவையும் என்றென்றும் வேண்டி நிற்கின்றோம்.

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

*சைவ விருத்திச் சங்க கருணை இல்லம்*

*பலாலி வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.*

**தொலைபேசி இல : 021 223 0778**

**e.mail :** hinduboard_edu@yahoo.com, hinduboard_edu@hotmail.com
hinduboard.edu@gmail.com

**web** : www.hinduboard.org

**Facebook :** Hindu Board



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை இல்லம் - ஓர் கருணையின் இல்லம்

கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தொடங்கியிருந்தது. யுத்தம் என்று வரும்பொழுது முதலில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளே. அநாதரவான இந்தக் குழந்தைகளுக்கு உதவும் நோக்கில் ஒரு ஸ்தாபனம் வேண்டும் என இலண்டனில் வாழ்ந்து வந்த திரு பொன். தெய்வேந்திரன் எண்ணியிருந்தார். எண்பதுகளின் இறுதிப் பகுதியில் சாதி, மத, இன வேறுபாடின்றி அரசியல் கலப்பில்லாத, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் அநாதைக் குழந்தைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி என்னும் அடிப்படைத் தேவைகளுக்கு நிதி உதவி செய்யும் நோக்கில் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை ஒரு ஸ்தாபனமாக இலண்டனில் நிறுவப்பட்டது.

தமிழ் அநாதைகள் அறக்கட்டளை தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான நிதி உதவிகளை வழங்கி இருக்கிறது. உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளுக்கும், கற்றல் தேவைகளுக்கும், கட்டட நிர்மாணத்திற்கும், தையல் எந்திரங்கள் போன்ற தொழிற்பயிற்சி உபகரணங்களும், பெறுமதி கணிக்கப் படாத அளவில் உடைகளும் சுனாமிப் பேரலை கால அனர்த்த நிவாரணப் பொதிகளும், கட்டட நிர்மாணம் செய்ய காணி நிலங்களும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேண்டிய கற்றலுக்கான உபகரணங்கள், பாதணிகள், சீருடைகள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொறுப்பாக இயங்கி வந்திருந்த அநாதை இல்லங்களுக்குத் தொடர்ச்சியாக நிதியுதவி செய்யப்பட்டது மட்டுமல்லாமல், போர்க்கால சூழலில் வழங்கப்பட்ட நன்கொடைகள் குழந்தைகளைச் சென்றடைந்தன என்பதும் அறியப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிதி சேகரிப்பதில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வந்த ஒரு நிறுவனமாகும். நிதி சேகரிப்பதற்கான பல உத்திகளை நேர்த்தியாகவும், சிறப்பாகவும் கண்ணியமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாகவும் எதற்கும் எந்நேரமும் கணக்குக் காட்டக்கூடிய நிலையிலும் நடத்தி வந்திருக்கிறது. உள்நாட்டு, தாய்நாட்டு, அயல்நாட்டு இசைக் கலைஞர்களைப் பயன்படுத்தி இசை, நடன நிகழ்ச்சிகள் நடாத்துதல், வருடந்தோறும் நாட்காட்டிகள் விற்றல், நல்ல உடைகள் சேகரித்தல், கட்டட நிர்மாணத்தின் பொழுது செலவீனத்தைச் சிறு கூறாக்கிப் பெற்றுக் கொள்ளுதல், பெருமனம் படைத்த தனவந்தர்களிடம் வாகனக் கொள்வனவிற்கு பெருநிதி உதவி கேட்டு வாங்குதல் எனச் சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் செயல்பட்டிருக்கிறது. இவ்வாறு நிதி உதவிகள் சிறப்பாக நடைபெற்று வந்தவேளையில், தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் நேரடி மேற்பார்வையில், அதற்குச் சொந்தமான ஓர் அநாதை இல்லம் அமைக்கப்படுவதற்கான நீண்ட நாள் கனவு நிஜவடிவம் பெறத்தொடங்கியது. அதுவும், அவ்வில்லம், யாழ்ப்பாணம் குறிப்பாக உரும்பிராயில் அமைக்கப்பட வேண்டும் என்பதற்குப் பல வலுவான காரணங்களும், ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைகளும் காணப்பட்டன.

பலாலி வீதி, உரும்பிராயில் காணி நிலத்தோடு கூடிய வீடு ஒன்று வாங்கப்பட்டது. இந்தக் காணியுடன் தொடர்ந்திருந்த நிலமும் வாங்கப்பட்டது. பெறுமதிமிக்க பெரிய காணி நிலத்தில் அமைந்திருந் ததோர் வீட்டிற்கு "கருணை இல்லம்" எனப் பெயரிட்டு பெண் குழந்தைகளுக்கான இல்லம் தொடங்கப்பட்டது. நாற்சார் வீடு முழுவதும் புனருத்தாரணம் செய்யப்பட்டு, உள்ளகக் குளிப்பறை, கழிப்பிட வசதிகள், நீர்த்தாங்கி, வெளிப்புற குளியலறை வசதிகள் நிர்மாணிக் கப்பட்டு எல்லாவித வசதிகளுடன் கூடிய இல்லம் அமைக்கப்பட்டது. நூலகம், மேலாளர் தங்குமிடம், சமையல் கூடம் என முழுமையானதொரு இல்லம் நிறுவப்பட்டது. தேவைகள் அதிகரித்தபொழுது, இரண்டாம் கட்டமாக, புதிய நாற்சதுர விடுதி கட்டப்பட்டது. விடுதிக் கட்டடமாக அமையவேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு 50 பெண் குழந்தைகள் வரை தங்கியிருக்கக் கூடிய புதிய விடுதி பூர்த்தி செய்யப்பட்டது. தளபாடங்கள் பெறப்பட்டன. கருணை இல்லம் நிறைவு கண்டது.

எல்லா வசதிகளும், தொலைநோக்கு கொண்டு அமைக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்த "கருணை இல்லம்" தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் சேவைகளின் மணி மகுடமாகும். சில வருடங்களுக்கு முன்பதாக கருணை இல்லத்தை நேரடியாக மேற்பார்வை செய்வதில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. கருணை இல்லத்தை ஒரு நம்பகமான, பொறுப்பான நிர்வாகத்திடம் ஒப்படைக்க தமிழ் அநாதைகள் அறக்கட்ட ளையில் தீர்மானிக்கப் பட்டு முடிவு செய்யப்பட்டது.

ஓர் அமைப்பைக் கண்டுபிடிக்கும் தேடலின் பொழுது "சைவ வித்தியா விருத்திச் சங்கம்" என்னும் ஸ்தாபனம் ஏகோபித்த முடிவாக உயர்ந்து நின்றது. இந்த சங்கத்தின் வழித்தடத்தில் நோக்கம், நிர்வாக கட்டமைப்பு, ஆண், பெண் குழந்தைகளை வளர்த்தெடுத்த அனுபவம், சிறப்பான தேர்ந்த நெறிமுறை, ஆதரவற்ற குழந்தைகளைச் சமுதா யத்தில் பொறுப்புள்ள பண்பாளர்களாக வளர்த்தெடுக்கும் பெரும் பணி, சூழற் காரணிகள் எதுவாகினும் அவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், தொடர்ச்சியான வளர்ச்சி, விரிவுபடுத்தல் எனப் பல முனைகளிலும் வியாபித்து நின்ற மிகப் பெரிய ஸ்தாபனமாக வளர்ந்த, உயர வளர்கின்ற "சைவ வித்தியா விருத்திச் சங்கம்" ஒன்று மட்டுமே தெரிவாக அமைந்தது.

தமிழ் அநாதைகள் அறக்கட்டளைக்கும், கருணை இல்லம் என்னும் அமைப்பிற்கும் பின்புலத்தார் பெரும்பாலும் தனி மனிதனாக நின்று, சிந்தித்து செயற்கரியன செய்த மாமனிதர் நோய் வாய்ப்பட்டிருந்த இறுதி நேரத்தில், தனது வாழ்நாளின் பேருழைப் பின் பெறுபேறான கருணை இல்லத்தைப் பொறுப்புள்ள, நம்பிக் கைக்குரிய, பாதுகாப்பான, மேலாண்மைத் திறமை மிக்க "சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம்" சட்ட பூர்வமாகக் கையளிக்கப்பட்டது என அறிந்து கொண்டபோது அமைதியாக, நிம்மதியாக உயிர் துறந்தார்.

"தமிழ் அநாதைகள் அறக்கட்டளை என்பது
தனியொரு மனிதனின் இமாலயச் சாதனை"

"கருணை இல்லம்" என்பது தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் தாபகத் தலைவர் அமரர் பொன். தெய்வேந்திரன் அவர்களின் கருணை இல்லம்.

கருணை இல்லம் பொன். தெய்வேந்திரன் என்னும்
ஒரு கருணையின் இல்லம்

**தமிழ் அநாதைகள் அறக்கட்டளை,**
ஐக்கிய இராட்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை இழந்த தமிழ்ச் சிறுமிகளுக்கு நல்வாழ்வளிக்கும்

# உரும்பிராய் கருணை இல்லம்

பல்வேறு வகையிலும் பெற்றோர் மற்றும் உறவுகளை இழந்த தமிழ் சிறுமிகளின் நல்வாழ்வுக்காகவும், சுபீட்சமான எதிர்காலத்திற் காகவும் கல்விக்கு ஊடாக அவர்களுக்கு சுதந்திரமான வாழ்க்கைக்கு வழிப்படுத்தவும் உரும்பிராயில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது "கருணை இல்லம்." உரும்பிராயை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரோபகாரி பொன். தெய்வேந்திரத்தின் தீர்க்க தரிசனமான சிந்தனையால் உருவாகியதுதான் உரும்பிராய் கருணை இல்லம்.

கருணை இல்லம் யாழ்ப்பாணம் - பலாலி நெடுஞ்சாலையில் உரும்பிராய் சந்தியிலிருந்து வடக்கு நோக்கி 300மீற்றர் தூரத்தில், ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக, பிரதான வீதிக்குக் கிழக்குப் பக்கத்தில் வீதியோரத்தில் உள்ளது. முன் பக்கத்தில் விசாலமான முற்றத்தைக் கொண்ட நாற்சார் வீடு, அதனோடு இணைந்தே 19 அறைகளைக் கொண்ட புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுமிகள் தங்குவதற் கான விசாலமான விடுதி, பயன்தரும் மரங்கள், மற்றும் பூந்தோட்டம், வாழைத்தோட்டம், என்பவற்றை உள்ளடக்கிய பசுமையான சூழல், விசாலமான வளவு, அமைதியான அமைவிடம்.

கருணை இல்லம் தொடர்பான சிந்தனையைச் செயல் வடிவம் செய்வதற்கு பொன். தெய்வேந்திரம் அவர்களும் அவரது பாரியார் வசந்தராணி தெய்வேந்திரம் அவர்களும் தனது சொந்தச் செலவில் நாற்சார் வீட்டைக் கொள்வனவு செய்து அதற்கான அமைப்பு விதிகளை உருவாக்கி பதிவு செய்து அதன் மேற்பார்வை நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் "சேர்மன்" என்ற பதவி நிலையில் உரும்பிராயைச் சேர்ந்த ஆசிரியமணி பஞ்சாட்சரத்திடம் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் தேதி உத்தியோக பூர்வமாக பணிகளை ஆரம்பித்து கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து செயற்பாடுகளிலும் பொன். தெய்வேந்திரம் அவர்களுடன் அவரது பாரியார் வசந்தராணி தெய்வேந்திரம் அவர்களும் இணைந்தே செயற்பட்டமை இருவரினதும் பரோபகாரத்தினை எடுத்துக்காட்டுகிறது.

அதன்பின் அவர்கள் லண்டனுக்குச் சென்று அதற்குரிய மேலதிக ஏற்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் லண்டனில் அதற்கான கட்டமைப்பை உருவாக்கினார்கள். அதற்கூடாக மேலதிக நிதி வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம் கருணை இல்லத்தில் "சேர்மன்" என்ற பதவி நிலையில் தனக்கு உதவியாக நான்கு பிரமுகர்களை இணைத்து கருணை இல்லத்தின் கருமப் பொறுப்புக்களை உரிய முறையில் உயர் நிலையில் பேணிநடாத்தினர். ஆசிரியமணி நோய்வாய்ப்பட்டதை அடுத்து பொன். தெய்வேந்திரம் அவர்களும் அவரது பாரியார் வசந்தராணி அவர்களும் லண்டனிலிருந்து வருகை தந்து ஆசிரியமணியின் தலைமைப் பொறுப்பை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த அ.ஈஸ்வரநாதன் ஆகிய என்னிடம் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒப்படைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஐந்து பேர் கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. நிர்வாகக் குழுவின் தலைவராக அ.ஈஸ்வரநாதன் ஆகிய யானும், செயலாளராக திருமதி தி. மதுரநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியை), பொருளாளராக திரு சி.சிவராம் (ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்), மற்றும் குழு உறுப்பினர்களாக திருமதி வி.புனிதவதி, திருமதி ந. உமா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிர்வாக உறுப்பினர்களின் (குழுவின்) சிறப்பான செயற்பாட்டால் பராமரிப்பு இன்றி, துன்பத்தில் உழலும் பெண் சிறுமிகளைத் தத்தெடுத்து ஆதரித்து ஏனையவர்கள் போல சமூகப் பயன்மிக்க மனிதர்களாக வாழவைக்கும், செயற்பாடு, இதற்காக மேலதிக கற்றல் செயற்பாடுகள், கணினி பயிற்சி, தையல் பயிற்சி போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் மாலைவேளைகளிலும், விடுமுறைக் காலங்களிலும் ஏற்ப்பாடு செய்யப்பட்டது. உயர்தரக் கல்விப் பெறுபேறுகளை மாணவிகள் பெற்றிருந்தனர். க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் செல்வி ந.விசாயினி 2008இல் 3Bயும், 2009இல் A,B,C பெறுபேறுகளும் கிடைத்தது. 2010இல் க.பொ.த (சாதாரணம்) செல்வி அ.உதயசாந்தி 4A,2B,3S பெறுபேற்றையும், செல்வி சு.டயந்தி 2B,2C,2S பெறுபேற்றையும் செல்வி நா.வினோதினி திருமணமாகி இல்வாழ்க்கையில் இணைந்து சிறப்பாக வாழ்வது போன்ற பல பயனுள்ள செயற்பாடுகளுக்கு கருணை இல்லம் வித்திட்டது.

அத்துடன் சிறுமிகள் மகிழ்வுடன் செயற்பட சிறுமிகள் உலாவுவதற்கு ஏற்ற வகையில் விசாலமான விறாந்தை மற்றும் உரிய நேரத்தில் கற்பதற்கு ஏற்புடைய வகையில் கற்கை மண்டபம், உள்ளக விளையாட்டுக்களுக்கு உரிய உபகரண வசதிகள், பொழுது போக்கு வதற்கு தொலைக்காட்சி வசதிகள், நூலக வசதிகள், என்பன வழங்கப்பட் டிருந்தன. அத்துடன் பொருத்தமான வகையில் போஷாக்குள்ள சைவ உணவுகளும், மருத்துவ வசதி என்பனவும் நல்ல முறையில் வழங்கப்பட்டது. இங்குள்ள மாணவிகள் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலையில் கல்வி கற்று வந்தனர்.

கருணை இல்லத்தைப் பற்றிக் கூறும்போது அதன் ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரம் அவர்களையும் அவரது பாரியார் திருமதி வசந்தராணி தெய்வேந்திரம் அவர்களையும் அவரது பிள்ளைகளையும் நினைக்காது விடமுடியாது. பாரியார் சொன்னார் அன்பு செய்யவென்று ஆவலாக சென்ற என்னை அதிகமாக அன்பு செய்யலாம் எனக்காட்டி என்னைக் குறுகவைத்தவர் தனது தலைவர் என்று பொன். தெய்வேந்திரம் அவர்கள் செம்மையான முறையில் மாண்புறு கருணை நிறைந்த வாழ்வை நிறைவான வகையில் வாழ்ந்துள்ளார். மரணம் என்பது நிச்சயமானது அழிவு இல்லாத ஆன்மாவை ஆண்டவனிடம் சேர்க்கும் ஒரு நிகழ்வே அமரரது ஐக்கியம். அந்த வகையில் அவர் செய்த சமூக, சமயப்பணியால் அவர் ஸ்ரீ காமாட்சி அம்பிகையின் பாதக்கமலங்களை சென்றடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டளவில் என்னால் கருணை இல்லத்தை தொடர்ந்து நிர்வகிக்க முடியாத நிலையில் புதிய நிர்வாகம். உருவாக்கப்பட்டது. நீதிமன்ற கட்டளைக்கு இணங்க பெண்களை மட்டும் கொண்ட நிர்வாக சபை உருவாக்கப்பட்டது. தலைவர் ம. திருநாவுக்கரசு, செயலாளர் திருமதி பு. விவேகானந்தன், பொருளாளர் திருமதி உ. தவநீதராசா, உறுப்பினர் திருமதி க. கலாநிதி செல்வி பே. ரோகிணி ஆகிய பெண்களைக் கொண்ட நிர்வாக சபை இக்காலத்தில் செயல்பட்டது. பல்வேறு பணிகளை இச்சபை முன்னெடுத்தபோதும் தொடர்ந்து பணியாற்றுவதில் சில சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இதனால் இவ்வில்லத்தை ஸ்தாபகர் பொன் தெய்வேந்திரம் அவர்களும், பாரியார் திருமதி வசந்தராணி தெய்வேந்திரம் அவர்களும் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்க ஆளுநர் சபையிடம் கையளித்துள்ளார்கள். அவர்களது சிறப்பான நிர்வாக செயற்பாட்டில் அதன் பணி சிறப்புற எல்லாம் வல்ல ஸ்ரீ காமாட்சி அம்பாளின் பாதங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

"தொடரட்டும் தம் பணி வளரட்டும் கருணை இல்லம்"

**அ. ஈஸ்வரநாதன்**
முன்னாள் தலைவர் கருணை இல்லம்,
ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்.

"ஆனந்த பவனம்"
உரும்பிராய் மேற்கு,
24.01.2019

# Real Education

**Education is not the amount of Information that is put into your brain and runs riot there, undigested all your life. We must have life-building, man-making, character-making, assimilation of ideas. If you have assimilated five ideas and make them your life and character, you have more education then any man who has got by heart a whole library. If education were identical with information, the libraries would be the greatest sages in the world and encyclopaedias the Rishis.**

***- Swami Vivekananda***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுவுநர் பொன். தெய்வேந்திரம் அவர்களின் திருவுருவச் சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்டத்தில் சாதனை படைத்த எமது சிறார்



ஜெ. கீர்த்தனா
(கராத்தே)

## பாடசாலை மட்டத்தில் சாதனை படைத்த எமது சிறார்கள்



ஜெ. ஜெனிற்றா
(சிறந்த வீராங்கனை)



த. தனுசியா
(வீதியோட்டம் 3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை சிறந்த பெறுபேறுகள் - 2018



ஜெ. டக்ஷனா
(கலைப்பிரிவு 2A, B)



பி. யாழினி
(கலைப்பிரிவு 3B)



மு. டக்ஷா
(கலைப்பிரிவு B, C, S)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கராத்தே - மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு சென்ற கருணை இல்ல அபிவிருத்தி நிலையச் சிறார்களுக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி வழங்கிய கௌரவிப்பு - 2017











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் தியாகம்

ஒரு ஊரில் அழகிய குடிசையில் ஒரு மகனும் தாயும் வசித்து வந்தார்கள். அச்சிறுவனுக்கு படிப்பதில் ஆர்வமில்லை. அச்சிறுவன் வகுப்பில் கடைசி மாணவனாகத்தான் வருவான். அவனது அம்மா அவனுக்கு எவ்வளவு சொல்லியும் பயனில்லை. அச்சிறுவனுக்கு பரீட்சை முடிந்து புள்ளிகள் வந்தன. அவனின் அம்மா புள்ளித்தாள் வாங்குவதற்கு சுகயீனம் காரணமாக செல்லவில்லை. அவன் புள்ளித்தாள்களுடனும், ஒரு கடிதத்துடனும் வந்தான். அம்மாவிடம் வந்து அக்கடிதத்தை கொடுத்து இதை ஆசிரியர் உங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்று கொடுத்தான். அவனின் அம்மா அதை வாசித்துப் பார்த்தாள். அவளது கண்களில் கண்ணீர் வடிந்தது. அவன் அம்மாவைப் பார்த்து அக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது எனக் கேட்டான். அப்போது அவனின் அம்மா சொன்னாள் நீ நன்றாக படிக்கிறாயாம், உன் படிப்பிற்கு இந்தப்பாடசாலை சரிவராது உன்னை இனி அப்பாடசாலைக்கு வரவேண்டாம் என்று எழுதி இருக்கின்றார் என்று சொன்னாள்.

அன்றிலிருந்து அவளது மகனுக்குத் தானே படிப்பு சொல்லிக் கொடுத்தாள். அவன் அம்மாவின் சொல்கேட்டு ஆர்வமாகப் படித்தான். அவன் படித்து பெரியவனானான். சில வருடங்களிற்குப் பிறகு தாய் இறந்துவிட்டாள். அதன் பின்பு அவன் பல கண்டுபிடிப்புக்களையும், ஆராய்ச்சிகளையும் வெற்றிகரமாகச் செய்து முடித்தான்.

ஒருநாள் தன் அறைக்குச் சென்றபோது அவனது ஆசிரியர் எழுதிய கடிதத்தை கண்டான் அவனுக்கு அதை திரும்பவும் படிக்க வேண்டும் போல இருந்தது. அதை வாசித்தான் அதில் உங்கள் மகனுக்கு படிப்பறிவு இல்லை. அவனை இந்தப் பாடசாலைக்கு அனுப்பவேண்டாம் என்று இருந்தது. அவன் தனது அம்மாவின் அன்பை நினைத்துக் கண்ணீர் வடித்தான். எனது அம்மா ஊக்கப்படுத்தியதால்தான் நான் இந்த நிலமைக்கு வந்தேன் என்று நினைத்தான். அச்சிறுவனே தான் மின்குமிழைக் கண்டு பிடித்த தோமஸ்அல்வா எடிசன் ஆவார்.

செல்வராசா தனுசியா

தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தவளே
அம்மா என்று நான் சொல்ல சோறு ஊட்டி
தாலாட்டி சீராட்டி என்னை வளர்த்தாயே
உன் நினைவை என் நெஞ்சுக்குள் வைத்து
என்றும் மறக்காமல் வாழ்வேன் என்றும்
உன்னுடைய அன்புப் பிள்ளை நான்.

ஜெ.ஜெயரூபி
தரம் - 07

## ஒத்த கருத்துச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அழகு | - | எழில் |
| கரை | - | ஓரம் |
| கண் | - | விழி |
| முகம் | - | வதனம் |
| அம்பு | - | கணை |
| பெண் | - | மங்கை |
| நகை | - | சிரிப்பு |
| வையம் | - | உலகம் |
| அனல் | - | நெருப்பு |
| மலை | - | கிரி |
| இலட்சியம் | - | குறிக்கோள் |
| சிநேகிதம் | - | நட்பு |

யூ.சிந்தியா
தரம் - 07

## உறவைத் தேடி பயணிப்பேன்

என் உறவு எங்கே
என்னோடு விளையாடிய
அண்ணா எங்கே
என் துயர் தீர்த்தவர் எங்கே
எம்மோடு இணைந்தவர் எங்கே
நூறு நாள் போராட்டம் அது
எப்போது வழி கிடைக்கும் – எனக்கு
என் உறவைத் தேடிய பயணம் இது
கிடைப்பாரா எனது அண்ணா.

கால்கள் நடுங்க கண்ணீர் வழிய
இடியும் வெடிக்க மனம் வலிக்க
உணவு வெறுக்க பசி மறுக்க
எங்கெல்லாம் பயணம் செய்வேன்.

இதற்கொரு வழிகிடைப்பது
எப்போது?
அனைவரும் ஒன்றாகுவது
எப்போது?
மகிழ்வது எப்போது?
அண்ணா வருவது எப்போது?
எனது அண்ணா
எங்கே இப்போது?

ப. சசிகலா
உயர்தரம் (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதை

01. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன? - கிளி

02. நாலு கால் உண்டு ஆனால் நடக்கத் தெரியாது? - கதிரை

03. தன்னுடன் சேருபவனை தன்னைப்போலவே மாற்றுவான் அவன் யார்?
- பால்

04. பல்லிருக்கு ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன? - சீப்பு

05. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் அவன் யார்?
- காற்று

06. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்? - பென்சில்

07. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார்?
- பூமி

த. ஜித்திகா
தரம் - 06

# ஒத்த கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| மீகாமன் | - மாலுமி | ஆரணியம் | - காடு |
| முகம் | - வதனம் | இரவி | - சூரியன் |
| சன்மானம் | - வெகுமதி | கபோதி | - குருடன் |
| கங்குல் | - பகல் | கவின் | - அழகு |
| எழினி | - திசைச்சேலை | கையுறை | - காணிக்கை |
| தந்திரம் | - உபாயம் | கரை | - எல்லை |
| சின்னம் | - இலச்சினை | கபடம் | - வஞ்சகம் |
| களங்கம் | - குற்றம் | ஆராதனை | - வணக்கம் |
| ஊதாரி | - வீண்செலவாளி | அளவில்லாத | - மட்டற்ற |
| அணங்கு | - தெய்வப்பெண் | சமர் | - சண்டை |
| சொப்பனம் | - கனவு | அகரம் | - எழுத்து |
| அனுமதி | - சம்பந்தம் | | |
| இடுக்கண் | - துன்பம் | | |
| அல் | - இரவு | | |

சே. சுதர்சனா
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் சொல் கேளீர்

புதுத்தெரு என்றொரு கிராமம் சின்னச்சாமி ஆடு மேய்ப்பவர். வழக்கமாக ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சின்னச்சாமிக்கு புல்லாங்குழல் வாசிப்பதென்றால் அவ்வளவு பிரியம். ஆடுகள் மேய்த்தவாறு மரத்தடியில் உட்கார்ந்து கண்மூடி புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்தான். அந்த புல்வெளியைச் சுற்றி முள்வேலி போடப்பட்டிருந்தது.

வேலியின் அருகே ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலியின் மறுபுறம் ஓநாய் ஒன்று வேட்டைக்கு காத்திருந்தது ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் எதையோ பார்ப்பதுபோல பாசாங்கு செய்தது அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி சற்று ஆச்சரியமாக பார்த்தது ஓநாயை முதல் முறையாக பார்த்ததினால் அதன் நோக்கம் ஆட்டுக் குட்டிக்கு தெரியாமல் "உனக்கு என்ன வேண்டும்?" என்று பாசமாக கேட்டது.

ஓநாயோ "நண்பா நண்பா ... நீ பார்க்க ரொம்ப அழகா இருக்கீங்க இங்கே இளம்புல் என்றால் எனக்கு ரொம்ப பிரியம் அதைத் தின்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்கவில்லை...." என்றது பாவமாக. ஓ ...! அப்படியா! நீ புல் சாப்பிடுவாயா? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. "சேச்சே ..... அதெல்லாம் சுத்தப் பொய்!" என்றது, ஓநாய். ஓ அப்படியா "சரி அங்கேயே இருங்கள் நான் வெளியே வந்து மலையின் அந்த பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டு கிறேன். நாம் இரண்டு பேரும் போய் ஜாலியா அதை சாப்பிட்டுவிட்டு நண்பர்களாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து ஓநாயின் பக்கம் போயிற்று ஓநாயின் திட்டம் தெரியாமலும் ஆடு சிநேகத்துடன் சென்றதும் அது சட்டென அதன் காலை பிடித்து கொண்டது ஆடு சத்தமாக கத்தத் தொடங்கியது.

சின்னசாமியும், தாய் ஆடும் சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓடினர். ஓநாய் அதற்குள் ஆட்டுக் குட்டியின் கழுத்தை பிடிக்கும் நேரத்தில் அவர்கள் ஓநாயை அடித்து விரட்டி விட்டார்கள். அந்த ஆட்டுக்குட்டிக்குத் தானாகத் தெரியவில்லை. அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால் இந்த மாதிரி ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். மதிப்பு வாய்ந்த தன் உயிரைக் காப்பாற்றிய சின்ன சாமிக்கும் பெற்றோர்க்கும் நன்றியோடு நடந்து கொண்டது அந்த ஆட்டுக்குட்டி.

**தனுசியா செல்வராசா**

**தரம் - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை இல்ல அபிவிருத்தி நிலையச் சிறார்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுற்றுலாவின் நிழல்கள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிப் பயிற்சி



தையற் பயிற்சி



இசை வகுப்பு



இல்ல நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளான் வளர்ப்பும் அதில் ஈடுபடும் சிறார்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருக்கிறேன் அம்மா!

கல்வியில் தொடங்கிய பயணத்தில்
கருத்தரித்த அந்தத் தருணத்தில்
வாந்தி தரும் மயக்கத்தில் அம்மா
நீ உன் வயிற்றினுள் கருவறையென்ற
அந்த அரிசாயனத்திலிருத்தி
உனக்கு நிகராகச் சரியாசனம் தந்தே
உன் இரத்தத்தினாலும்
மூச்சுக் காற்றினாலும்
சிப்பிக்குள் இந்த முத்தை வளர்க்கிறாய்.

நான் கருவறைக்குள்ளிருக்கும்
அனுபவத்தை பரபரப்போடும் பயத்தோடும்
அடிவயிற்றைத் தொட்டுப் பார்க்கும்
அந்தப் பரவசம் எனக்கு புரிகிறது தாயே..!

உயிரோடு கலந்த உதிரத்தின் உறவே
தங்கத் தமிழதை தரப்போகும் தாயே
உன் அன்பை உணர்கிறேன்
பத்து மாதங்கள் உள்ளிருந்து
என் பிஞ்சுக் கால்கள் தரப்போகும் உதையை
தந்தையின் கரம் பிடித்து
தடவிக் காட்டப்போகும் உணர்வை
எண்ணிப் பார்க்கிறேன்
உள்ளம் கனிகிறது தாயே!

இந்தச் சிசுவின் நலனுக்காக
இன்று உன் உதிரத்தால் வாழவைத்த
கருவறைக்குள் வைத்துத் தாலாட்டுகிறாய்
நாளை உன் வீட்டுச் சுவர்களில்
கீறும் கிறுக்கல்களை
பார்த்து ரசிப்பாயா? கோபம் கொள்வாயா?
தந்தையுடன் துள்ளி விளையாடி
பள்ளி செல்லும் அழகை
வாசல்வரை வந்து நின்று
வழியனுப்பி வைத்து ரசிப்பாயா? அம்மா!
தாயே உன் முகம் பார்க்கத் துடித்து
உன் உள்ளங்கைகளின் ஸ்பரிசத்திற்காக
ஏங்கித் தவம் கிடக்கிறேன் அம்மா!

**யாழினி பிரபாகரன்**
**உயர்தரம் 2018**

## My Best Friend

My best friend is Gowsana. She is from Point Pedro. She is seventeen years old. She is in grade Eleven. Her hobby is reading story books. Her father is Vijayakumar. Her mother is Vanitha. She likes orange juice very much. She is friendly and helpful. She helps me in my studies. She wants to be a lawyer. I like Gowsana very much.

***T. Sinthuja***
***Grade 11***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்து மூன்று நாயன்மார்கள்

| நாயன்மார்கள் | ஊர் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|
| 01. அதிபத்தர் | நாகபட்டினம் | ஆவணி ஆயிலியம் |
| 02. அப்பூதியடிகள் | திங்களூர் | தைச் சதயம் |
| 03. அமர்நீதியார் | பழையாறை | ஆனிப் பூரம் |
| 04. அரிவாட்டாயர் | கணமங்கலம் | தைத் திருவாதிரை |
| 05. ஆனாயர் | மங்கலவூர் | கார்த்திகை அத்தம் |
| 06. இசைஞானியார் | திருநாவலூர் | சித்திரைச் சித்திரை |
| 07. இடங்கழியார் | கொடும்பாளூர் | ஐப்பசிக் கார்த்திகை |
| 08. இயற்பகையார் | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி உத்தரம் |
| 09. இளையான்குடிமாறன் | இளையான்குடி | ஆவணி மகம் |
| 10. உருத்திர பசுபதியார் | திருத்தலையூர் | புரட்டாதி அச்சுவினி |
| 11. ஏறிபத்தர் | கருவூர் | மாசி அத்தம் |
| 12. ஏயர்கோன் கலிக்காமர் | திருப்பெருமங்கமலம் | ஆனி ரேவதி |
| 13. ஏனாதி நாதர் | எயினனூர் | புரட்டாதி உத்தராடம் |
| 14. ஐயடிகள் காடவர்கோன் | காஞ்சிபுரம் | ஐப்பசி மூலம் |
| 15. கணநாதர் | சீர்காழி | பங்குனித் திருவாதிரை |
| 16. கணம்புல்லர் | இருக்குவேளூர் | கார்த்திகைக் கார்த்திகை |
| 17. கண்ணப்பர் | உடுப்பூர் | தை மிருகசீரிடம் |
| 18. கலிக்கம்பர் | திருப்பெண்ணாகடம் | தை ரேவதி |
| 19. கலியர் | திருவொற்றியூர் | ஆடிக் கேட்டை |
| 20. கழறிற்றறிவார் | கொடும்பாளூர் | ஆடிச் சுவாதி |
| 21. கழற்சிங்கர் | பல்வநாடு | வைகாசிப் பரணி |
| 22. காரியார் | திருக்டவூர் | மாசிப் பூராடம் |
| 23. காரைக்காலம்மையார் | காரைக்கால் | பங்குனிச் சுவாதி |
| 24. குங்குலியகலயர் | திருக்கடவூர் | ஆவணி மூலம் |
| 25. குலச்சிறையார் | மணமேற்குடி | ஆவணி அனுஷம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. கூற்றுவர் | காந்தை | ஆடித் திருவாதிரை |
| 27. கோச்செங்கட் சோழர் | திருவானைக்கா | மாசிச் சதயம் |
| 28. கோட்புலியார் | நாட்டியத்தான்குடி | ஆடிக் கேட்டை |
| 29. சடையனார் | திருநாவலூர் | மார்கழித் திருவாதிரை |
| 30. சண்டேஸ்வரர் | திருசேய்ருலூர் | தை உத்தரம் |
| 31. சத்தியார் | வரிஞ்சியூர் | ஐப்பசிப் பூசம் |
| 32. சாக்கியார் | திருச்சங்கமங்கை | மார்கழிப் பூராடம் |
| 33. சிறப்புலியார் | திருஆக்கூர் | கார்த்திகைப் பூராடம் |
| 34. சிறுத்தொண்டர் | திருச்செங்காட்டன்குடி | சித்திரைப் பரணி |
| 35. சுந்தர் | திருநாவலூர் | ஆடிச் சுவாதி |
| 36. செருத்துணையார் | தஞ்சாவூர் | ஆவணிப் பூசம் |
| 37. சோமாசிமாறர் | திருஅம்பர் | வைகாசி ஆயிலியம் |
| 38. தண்டியடிகள் | திருவாரூர் | பங்குனிச் சதயம் |
| 39. திருக்குறிப்புத்தொண்டர் | காஞ்சிபுரம் | சித்திரைச் சுவாதி |
| 40. திருஞானசம்பந்தர் | சீர்காழி | வைகாசி மூலம் |
| 41. திருநாவுக்கரசர் | திருவாரூர் | சித்திரைச் சதயம் |
| 42. திருநாளைப்போவர் | ஆதனூர் | புரட்டாதி ரோகிணி |
| 43. திருநீலகண்டர் | சிதம்பரம் | தை விசாகம் |
| 44. திருநீலகண்டயாழ்ப்பாணர் | எருக்கத்தம்புலியூர் | வைகாசி மூலம் |
| 45. திருநீலநக்கர் | சாத்தமங்கை | வைகாசி மூலம் |
| 46. திருமூலர் | சாந்தனூர் | ஐப்பசி அச்சுவினி |
| 47. நமிநந்தியடிகள் | ஏமப்பேரூர் | வைகாசிப்பூசம் |
| 48. நரமிங்கமுனையரையர் | திருமுனைப்பாடி | புரட்டாதிச் சதயம் |
| 49. நின்றசீர்நெடுமாறர் | மதுரை | ஐப்பசிப் பரணி |
| 50. நேசர் | காம்பீலி | பங்குனி ரோகிணி |
| 51. புகழ்ச்சோழர் | உறையூர் | ஆடிக் கார்த்திகை |
| 52. புகழ்த்துணையார் | செருவிலிபுத்தூர் | ஆவணி ஆயிலியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 53. பூசலார் | திருநின்றவூர் | ஐப்பசி அனுஷம் |
| 54. பெருமிழலைக்குறும்பர் | பெருமிழலை | ஆடிச் சித்திரை |
| 55. மங்கையர்க்கு அரசியார் | மதுரை | சித்திரை ரோகிணி |
| 56. மானக்கஞ்சாறர் | கஞ்சனூர் | மார்கழிச் சுவாதி |
| 57. முருகர் | திருப்புகலூர் | வைகாசி மூலம் |
| 58. முனையடுவார் | திருநீடூர் | பங்குனிப் பூசம் |
| 59. மூர்க்கர் | திருவேற்காடு | கார்த்திகை மூலம் |
| 60. மூர்த்தி | மதுரை | ஆடிக் கார்த்திகை |
| 61. மெய்ப்பொருளார் | திருக்கோவலூர் | கார்த்திகை உத்தரம் |
| 62. வாயிலார் | திருமயிலாப்பூர் | மார்கழி ரேவதி |
| 63. விறன்மிண்டர் | செங்குன்றூர் | சித்திரைத் திருவாதிரை |

ஜெ. கீர்த்தனா

க.பொ.த உயர்தரம் 2019

## விடுதலை

பத்து மாதம்
அன்னையின் கருவறையில்
பக்குவமாய் வளர்ந்தோம் பாரினைக்
காண்பதற்காக ஜனனம் எனும்
பெயரில் விடுதலையாகின்றோம்.

கல்வியறிவை விருத்தி செய்ய
பள்ளிக்குச் சென்று
பத்தொன்பது வயதினிலே
அதினின்றும் விடுதலையாகின்றோம்

நம் வாழ்வினை முடிவு செய்யவும்
பல்கலையும் விருத்தி செய்யவும்
பல்கலைக்கழகம் சென்று
மூன்றே ஆண்டுகளில் அதினின்றும்
விடுதலையாகின்றோம்.

மண்ணில் மதிப்புடன் வாழ்ந்த நாம் –
இறுதியில் மண்ணுக்கே இரையாக
மரணம் எனும் பெயரில்
இவ்வுலகை விட்டே
விடுதலையாகின்றோம்.

இத்தனை விடுதலையும் பெற்ற நாம்
ஈழத்திரு நாட்டில் உள்ள
இன்னல்களிலிருந்து
விடுதலையாவது எப்போது?

சு. நந்தினி

தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

02. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

03. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

04. ஆனைக்கும் அடி சறுக்கும்.

05. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

06. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

07. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

08. ஆழம் அறியாமல் காலை விடாதே.

09. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

10. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

11. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

12. இளமையிற் கல்வி சிலை மேல் எழுத்து.

13. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

14. துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்.

15. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

16. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

17. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.

18. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

19. இங்கிதம் தெரியாதவனுக்கு சங்கீதம் தெரிந்தும் என்ன பயன்?

20. அகல உழுவதை விட ஆழ உழு

21. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

22. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.

23. சாண் ஏற முழம் சறுக்குவது போல.

கி. உதயகிருசாலினி

தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு

* எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கே ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

* வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம் ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

* ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்.

* எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியும்.

* போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன் ஆனால் காலம் வீணாக்கப்பட்டு இழக்கப்படுவதை மட்டும் ஒருபோதும் நான் விரும்பமாட்டேன்.

* ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த பொழுதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

* எல்லை மீறிச் சிரிப்பவன் மூடன். சிரிக்காமல் இருப்பவன் வஞ்சகன்.

* மனிதனை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன.

* நெஞ்சில் தைரியமும் உண்மையும் இருந்தால் நம்மை நாமே தற்காத்துக் கொள்ளலாம்.

* கீழான இலட்சியத்தில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியடைவது மேல்.

**ப. சசிகலா**

**உயர்தரம் - 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. ஐந்து கோடி வருடங்களுக்கு முன் தோன்றிய முதல் மீன்?
நட்சத்திர மீன்

02. வாத்து முட்டையிடும் நேரம்?
அதிகாலை மட்டும்

03. பிறந்த அன்றே இறக்கும் பூச்சி?
ஈசல்

04. மிகச்சிறிய இதயம் கொண்ட மிருகம்?
சிங்கம்

05. கண்கள் மூலம் சத்தத்தைக் கேட்கும் ஈருடகவாழி?
தவளை

06. கடல் வாழ் பாலூட்டி?
திமிங்கிலம்

07. பறக்க முடியாத பறவைகள்?
ரியா, எமூ, கிவி

08. உலகில் மிகப்பெரிய பாலை வனம்?
சகாராப் பாலைவனம்

09. மூவின மக்களுக்கும் வழிபடக் கூடிய புனிதமான மலை?
சிவனொளிபாதமலை

10. சைவசமயத்திற்காக உழைத்த பெரியார்?
ஆறுமுகநாவலர்

ப. சாதனா
தரம் - 09

## அம்மா

பத்துமாதம் சுமந்து
என்னைப் பெற்றெடுத்த அன்னையே
என்றும் நினைவுகள்
என் மனதில் சுகமம்மா
அன்புக்கு இலக்கணம் - நீ
என் உயிருக்கு இலக்கியம் - நீ
உன் உதிரத்தைப் பாலாக்கி
எனக்கு உணவளித்தவள்- நீ

உன் வயிறு பசியால் கீதம் இசைக்க
என் வயிறு வளர்த்தவள் - நீ
வானில் நிலவைப் போல்
என்னோடு இருப்பேன் என்றாய்
கண்ணின் இமை போல்
கடைசிவரை இருப்பேன் என்றாய்
எம்மை யாராலும்
பிரிக்க முடியாது என்றாய்

கடைசியில் ஏன் என்னை
விட்டுப்பிரிந்து சென்றாய்
அன்னையே என் முன்னால்
தெய்வமாகி ஒரு தடவை ஒளிர்வாயா!

அடுத்த ஜென்மத்தில்
நீ என் சேயாகவும்
நான் உன்னைச் சுமக்கும்
தாயாகவும் வரவேண்டும்
அடுத்த ஜென்மம் முடியவே கூடாது
அதில் நாம் பிரியவே கூடாது.

வி. கௌசனா
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்

01. நித்திரையின் தூதுவன்; நினையாமல் எட்டிப்பார்ப்பான் அவன் யார்?
கொட்டாவி

02. கண்ணில் கண்டதை சுருட்டிக் கொள்வான் வண்ண நிறங்களில் வெளியேற்றுவான் அவன் யார்?
கமரா

03. கண்ணுக்குத் தெரியாதவன், உயிருக்கு உகந்தவன் யார்?
காற்று

04. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பது?
பூமி

05. கழற்றிய சட்டையைத் திருப்பிப் போடமாட்டான் அவன் யார்?
பாம்பு

06. வாயில்லை வார்த்தைகள் சொல்லுவான்; உயிரில்லை வீட்டிற்கு வருவான் அவன் யார்?
கடிதம்

07. மண்ணில் பிறந்து விண்ணில் மறையும் வாசனை தந்து நெஞ்சில் நிறையும் அது எது?
சாம்பிராணி

08. உரசினால் உயிரை விடுவான் அவன் யார்?
தீக்குச்சி

09. அடர்ந்த காட்டிற்குள் நுழைவான்; அலைந்து திரிந்து அழகு படுத்துவான் அவன் யார்?
சீப்பு

10. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது அது என்ன?
நீர்

11. பழகினால் மறக்காதவன், பயந்தோரை விடாதவன் அவன் யார்?
நாய்

12. ஆடிஆடி நடப்பான், அரங்கத்தில் நடப்பான் அவன் யார்?
யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும்

கரும்பு

14. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் தூசி கிளம்பாது அது என்ன?

எறும்பு

15. அவன் அழுதால் உலகம் சிரிக்கும் அவன் யார்?

வானம்

16. வெளியில் போகும்போது நண்பன் வீட்டிற்கு வந்தால் விரோதி அவன் யார்?

செருப்பு

க. டிலக்சனா
தரம் - 07

---

## தாயே உன்னை மறவேன்

நான் செய்த தவறுக்கு
தண்டனை எனக்குத் தந்து
வேதனையை நீங்கள்
அல்லவா அனுபவித்தீர்கள்

எத்தனை அன்பு அரவணைப்பு
எத்தனை அறிவுரைகள்
ஆலோசனைகள்
எல்லாம் எதற்கு
என் வாழ்வு வளம் பெறத்தானே!

எத்தனை நாள்
மழையில் நனைந்தீர்கள்
வெயிலில் காய்ந்தீர்கள்
பசியை மறந்தீர்கள்
உங்கள் நலனை விட
என் நலனில் தானே
அதிகம் அக்கறை செலுத்தினீர்கள்
நான் என் ஆயுள்
முழுவதும் உங்களுக்குக்
கடமைப்பட்டுள்ளேன் அம்மா
மறு பிறவியிலும்
நான் உம் மகளாய்
பிறக்கும் வரம் வேண்டும் அம்மா!

க.நாகதர்சினி
உயர்தரம் - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விந்தை உலகு

உள்ளங் கவர்ந்த வாழ்வை
இவ்வுலகில் வாழ வழியுண்டா?
முன்னோர் வாழ்ந்த வாழ்வில்
இன்று முன்னேற்றம் கண்டது
சீர்கேடுகளில் மட்டுமே

விஞ்ஞானத்தால்
விண்வெளியின் ஆளும் மனிதன்
வாழ்க்கையின் விடியல்களைத்
தொலைத்து விட்டான்

வீதியில் இறங்க
விசமிகள் சூழ்கின்றார்கள்
விதைத்தவனே வாழ்வை
அறுவடை செய்யும் அவலம்
உயிரைக் காப்பாற்ற கற்றுக்
காவிக்கொள்ளும் கலக்கம்
உணவே நஞ்சாகி
உடலை உருக்கும் சலனம்

மனிதனை ஆளும் தொழில்நுட்பமும்
தொடரும் தொல்லைகளும்
போதையின் மோகமும்
வாழ்க்கையை வடிவமைக்க
வாழ்வதெப்படி
வாழ்க்கையை இழந்து விட்டால்
மனிதா வாழ்க்கையை
இழந்து விட்டாய் உன் அறிவால்
பசுமையான வாழ்வைப்பலமாக்கு

சி. கீதா
க.பொ.த உயர்தரம் 2019

## விடியலை நோக்கி

பள்ளிப்பருவத்தில்
பள்ளி செல்ல முடியவில்லை
காலங்கற்றுத்தந்த நாகரீகம்
கலாசாரத்தை கைது
செய்து விட்டதா?
சுதந்திரம் தருவீரா?
பட்டாம் பூச்சியாய் பறந்து செல்ல

மது மயக்கம்
மாதை அழிக்கிறதா?
அந்திப் பொழுதில்
அன்பரும் அந்நியராக்குவர்
மதி மயக்கம்
மானிடர் உயிரைக்
காவு கொள்கின்றதே
போதையற்ற உலகைத் தருவீரா?
போதும் நாடகம் பொறுமையில்லை
விந்தை உலகிடை
விஞ்ஞானம் விதைத்த
தொழில்நுட்ப விருட்சமானாலும்
வேலையில்லாத் திண்டாட்டம்
வேதனையே விளைபயிராய்
இன்னலைப் போக்க
இன்றே விடியலை நோக்கி

ஜெ. டக்ஷனா
உயர்தரம் – 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிர் அம்மா

பத்து மாதம் சுமந்து பெற்று – நீ
இப்போது பத்து நிமிடம் கூட என்
அருகில் இருப்பதற்கு
தாமதமாக இருக்கிறது
இதற்கெல்லாம் காரணம்
எனமைப் படைத்த இறைவனே.

உன் கருவறையில் நானிருந்து
உதைத்தது உன்னை
நோகடிக்க அல்ல பத்து மாதமாய்
சுமக்கும் உன்முகம் பார்க்கவே.

பிஞ்சு வயதில் நான் அழுதது
பசியினால் அல்ல
பால் குடிக்கும் சாட்டில் உன்
இதயத்தை முத்தமிட.....

பள்ளியில் என்னை சேர்க்கும்போது
நான் அழுதது அச்சத்தினால் அல்ல
உன் பாசத்தை பிரிகிறேனோ
என்ற பயத்தினால்

இங்கு தனிமையில் அழுகிறேன்
உறவுகள் இல்லாமல் அல்ல
உன் அன்பு காணாமல் அம்மா!.

த. தனுசியா
தரம் – 11

## வாழ்வதற்காக வாசி

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாற்றிவிடாதே
பணிவாய் இரு ஆனால்
கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு
ஆனால் கோபப்படாதே

சிக்கனமாய் இரு ஆனால்
கஞ்சப்படாதே வீரமாய் இரு ஆனால்
போக்கிரியாய் இராதே
தர்மம் செய் ஆனால்
ஆண்டியாய் ஆகிவிடாதே
பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே

நம்ப நட ஆனால் நம்பி நடவாதே
உழைப்பை நம்பு ஆனால்
ஊமையாகி விடாதே
கடவுளை நம்பு ஆனால் ஏமாற்றி விடாதே
உன்னைப் பெற்ற தாயை மறந்து விடாதே

சிவபெருமான் ராமனுக்கு
கூறியது – சிவகீதை
இறைவன் மனிதனுக்கு
உரைத்தது – பகவத்கீதை
மனிதன் இறைவனுக்கு
உரைத்தது – திருவாசகம்
மனிதன் மனிதனுக்கு
உரைத்தது – திருக்குறள்

சே. சுதர்சனா
தரம் – 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிலக்கிய நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

## சங்க காலம்

| | |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | - நக்கீரனார் |
| பொருநர் ஆற்றுப்படை | - முடத்தாமக் கண்ணியார் |
| சிறுபாணாற்றுப்படை | - நல்லூர் நத்தத்தனார் |
| பெரும்பாணாற்றுப்படை | - உருத்திரன் கண்ணனார் |
| கூத்தராற்றுப்படை | - பெரும் கௌசிகனார் |
| குறிஞ்சிப் பாட்டு | - கபிலர் |
| முல்லைப்பாட்டு | - நப்பூதனார் |
| மதுரைக்காஞ்சி | - மாங்குடி மருதனார் |
| பட்டினப்பாலை | - கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| நெடுநல் வாடை | - நக்கீரர் |

## சங்க மருவிய காலம்

| | |
|---|---|
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| நான்மணிக்கடிகை | - விளம்பிநாகனார் |
| இன்னா நாற்பது | - பிற்காலக் கபிலர் |
| இனியவை நாற்பது | - பூதஞ் சேந்தனார் |
| திரிகடுகம் | - நல்லாதனார் |
| ஆசாரக் கோவை | - பெருவாயில் முள்ளியார் |
| மணிமேகலை | - கூலவாணிகன் சாத்தனார் |
| களவழி நாற்பது | - பொய்கையார் |
| அற்புதத்திருவந்தாதி | - காரைக்கால் அம்மையார் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | - காரைக்கால் அம்மையார் |
| திருவிரட்டை மணிமேகலை | - காரைக்கால் அம்மையார். |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| 1ம் திருவந்தாதி | - பொய்கையாழ்வார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2ம் திருவந்தாதி | - | பூதத்தாழ்வார் |
| 3ம் திருவந்தாதி | - | பேயாழ்வார். |

**பல்லவர் காலம்**

| | | |
|---|---|---|
| திருக்கையால ஞான உலா | - | சேரமான் பெருமான் |
| தேவாரங்கள் (1 -7 திருமுறைகள்) | - | அப்பர், சம்பந்தர், சுந்தரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| திருக்கோவையார் | - | மாணிக்கவாசகர் |
| திருமந்திரம் | - | திருமூலர் |
| பொன் வண்ணத்தந்தாதி | - | சேரமான் பெருமாள் |
| திருக்கோவையார் | - | சேரமான் பெருமாள் |
| திருப்பல்லாண்டு | - | சேந்தனார் |
| நான்முகன் | - | திருமாளிசையாழ்வார் |
| பெரிவாழ்வார் திருமொழி | - | பெரியாழ்வார் |
| திருமாலை | - | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| திருப்பள்ளியெழுச்சி | - | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| பெரிய திருமொழி | - | திருமங்கையாழ்வார் |
| திருவெழுக் கூற்றிருக்கை | - | திருமங்கையாழ்வார் |
| திருக்குறுந் தாண்டகம் | - | திருமங்கையாழ்வார் |
| திருநெடுந்தாண்டகம் | - | திருமங்கையாழ்வார் |
| பெரிய திருமடல் | - | திருமங்கையாழ்வார் |
| திருப்பாவை | - | ஆண்டாள் |
| நாச்சியார் திருமொழி | - | ஆண்டாள் |
| பெருமாள் திருமொழி | - | குலசேகர ஆழ்வார் |
| திருவிருத்தம் | - | நம்மாழ்வார் |
| திருவாசிரியம் | - | நம்மாழ்வார் |
| பெரிய திருவந்தாதி | - | நம்மாழ்வார் |
| திருவாய் மொழி | - | நம்மாழ்வார் |

**சோழர் காலம்**

| | | |
|---|---|---|
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்க தேவர் |
| குண்டலகேசி | - | நாதகுப்தனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சூளாமணி | - | தோலா மொழித்தேவர் |
| யசோதர காவியம் | - | வெண்ணாவலூர் உடையார்வோர் |
| நாககுமார காவியம் | - | குறவி |
| பெரிய புராணம் | - | சேக்கிழார் |
| கந்த புராணம் | - | கச்சியப்ப சிவாச்சாரியர் |
| கம்பராமாயணம் | - | கம்பர் |
| கலிங்கத்துப்பரணி | - | சயங்கொண்டார் |
| குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் | - | ஒட்டக்கூத்தர் |
| நெஞ்சு விடுதூது | - | உமாபதிச் சிவாச்சாரியார் |
| நன்னூல் | - | பவணந்தி முனிவர் |
| நேமிநாதம் | - | குணவீர பண்டிதர் |

## நாயக்கர் காலம்

| | | |
|---|---|---|
| கந்தர் அலங்காரம் | - | அருணகிரிநாதர் |
| கந்தர் அனுபூதி | - | அருணகிரிநாதர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| மகாபாரதம் | - | வில்லிபுத்தூர் ஆழ்வார் |
| கச்சிக் கலம்பகம் | - | இரட்டையர் |
| தில்லைக்கலம்பகம் | - | இரட்டையர் |
| ஏகாம்பரநாதருலா | - | இரட்டையர் |
| தனிச் செய்யுள் சிந்தாமணி | - | காளமேகப்புலவர் |
| திருவானைக்கா உலா | - | காளமேகப் புலவர் |
| திருவிளையாடற்புராணம் | - | பரஞ்சோதி முனிவர் |
| சேது புராணம் | - | நிரம்பவழகிய தேசிகர் |
| திருப்பரங்கிரிப் புராணம் | - | நிரம்பவழகிய தேசிகர் |

**மு. டக்ஷா**
**க.பொ.த உயர்தரம் 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Books are my best friends

All human beings yearn for friends. But genuine friends are not common. This is because friends are unfaithful or changeable or death may separate them. Happy is the man who acquires the habit of reading while he is young. It is just like acquiring a life-long source of pleasure. He will never be lonely. He always has a pleasant occupation during his leisure. The piles of books we have are really better then the choicest gold or silver. Having books is indeed like owning great treasures.of knowledge, noble thoughts and high ideals.

The blessings which the reading habit confers on the possessor are many if he chooses the right kind of pleasure. Some books like fiction are read only for pleasure. But these are not good at all times. It is just like eating cakes and sweet meats. As we need plain wholesome food for a healthy body, so must we have serious reading for the mind.

*T. Disaliny*
*Grade -09*

---

## அன்பு அப்பா

விபரம் தெரிந்த நாளிலிருந்து
வீடு தான் உலகமென்று
வளர்த்தவர் என் அப்பா
அப்பாவைப் போலவே
தப்பாதிருப்பதென்பது
நான் நினைத்தது
தப்பாகாதே அப்பா.

க.நாகதர்சினி
உயர்தரம் 2019

## என் அப்பா இப்படி...

அப்பா!
நீங்கள் வளர்த்து மகள்
சாமரங்களாய் உங்கள்
அரவணைப்பு
போதனையாய் உங்கள் வார்த்தை
அது ஒன்றே போதுமப்பா

சி.கீதா
உயர்தரம் 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணமும் அவற்றின் உரையாசிரியர்களும்

| **இலக்கணம்** | **உரையாசிரியர்** |
|---|---|
| இறையனார் அகப் பொருள் | நக்கீரர் |
| தமிழ்நெறி விளக்கம் | நூலாசிரியர் |
| இறையனார் அகப்பொருள், உரை | நீலகண்டனார் |
| தொல்காப்பியம், பொதுப்பாயிரம் | அத்திரையன் பேராசிரியர் |
| யாப்பருங்கலக் காரிகை | குணசாகரர் |
| தொல்காப்பியம் முழுமையும் | இளம்பூரணர் |
| வீரசோழியம் | பெருந்தேவனார் |
| வச்சணந்திமாலை | உரையாசிரியர் |
| தொல்காப்பியம் பொருள் | பேராசிரியர் |
| அபிநயம் | இராச பவித்திறப் பல்லவதரையர் |
| தொல்காப்பியம் சொல் | சேனாவரையர் |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராயநம்பி |
| நன்னூல் | மயிலைநாதர் |
| களவியற் காரிகை | உரையாசிரியர் |
| தொல்காப்பியம் சொல் | கல்லாடர் |
| தொல்காப்பியம் சொல் | பழைய உரையாசிரியர் |
| தொல்காப்பியம் சொல் | தெய்வச்சிலையார் |
| புறப்பொருள் வெண்பாமாலை | சாமண்டி தேவநாயகம் |
| நேமிநாதம் | உரையாசிரியர் |

**பா.நாகரூபி**
**உயர்தரம் 2019**

---

## பொன். தெய்வேந்திரம்

மகிழ்ச்சிகள் விளைந்துவர புதுமணம் வீச
நாளாந்த நிகழ்வாக நடந்தபடி வருகிறதே
வந்தவரை வரவேற்று இனிய புதுமை நாளைக் கொண்டாடி
மகிழ்வு வளமாய் வழி வந்தவரை எல்லாம்
நன்றே வளமாய் கொண்ட எம்மண்டபம்
என்றும் மணம் வீசும் புது மண்டபம்
நல்ல உள்ளம் கொண்ட எம் தெய்வம்
அவர் ஒருவர் காட்டிய வழி இதுவே
எம் அனைவர் கல்வியும் மேலோங்க
வித்திட்ட எம் தந்தையாம் அவரே
பொன்னான உள்ளம் கொண்டவராம்
பொன். தெய்வேந்திரம் வாழ்க உம் புகழ் என்றும்.

**பா. நாகரூபி**
**உயர்தரம் 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணை இல்லச் சிறுவர் அபிவிருத்தி நிலையச் சித்திரைப் புத்தாண்டு விழா
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி விழா - 2018







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கலாசார அலுவல்கள் திணைகளத்தால் சங்கத்துக்கு

வழங்கப்பட்ட

# தேசிய ரீதியிலான விருதுகள்.



2016



2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப்புத்தாண்டு கைவிஷேசம் வழங்கும் நிகழ்வு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயந்த முயலின் கதை

ஒரு காட்டில் முயல், நரி, குரங்கு, மான், யானை, சிங்கம் ஆகிய விலங்குகள் வசித்து வந்தன. ஒரு நாள் அந்தக்காடே மிகவும் அமைதியாக காணப்பட்டது. அப்பொழுது அந்த கூட்டத்தில் இருந்த முயல் எப்பொழுதும் பலவிதமான கற்பனை காணும். ஒரு நாள் அந்த முயல் காட்டில் ஓடி ஆடி விளையாடியது. விளையாடியதால் அதற்கு களைப்பு ஏற்பட்டது. அது காட்டின் நடுவில் உள்ள தென்னை மரத்தின் கீழ் அமர்ந்து உறங்கத் தொடங்கியது அதன் உறக்கத்தில்கூட ஒரு விசித்திரமான கற்பனை அந்தக் கற்பனை யாதெனின் விண்ணிலிருந்து ஒரு கல் பூமியை நோக்கி விழுகின்றது அப்பொழுது இந்த பூமி அழிவடைந்து வருகின்றது. காட்டிலுள்ள விலங்குகள் அழிந்துவிடப் போகின்றன. நான் எப்படியும் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற கற்பனை அதன் கனவில் வந்தது.

அந்த கற்பனை முடியும் முன்னே தென்னை மரத்தில் இருந்து ஒரு தேங்காய் விழுந்தது. அதன் தூக்கம் கலைந்தது. அதனால் தான் கண்ட கற்பனை உண்மை என்று நினைத்து அலறிக்கொண்டு காட்டிற்குள் ஓடியது. அப்பொழுது காட்டில் மற்றைய முயல் அந்த முயலிடம் கேட்டது ஏன் இப்படி ஓடி வருகின்றாய் என்று கேட்ட உடனேயே அது கூறியது நான் ஒரு மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருக்கும்போது விண்ணில் இருந்து ஒரு கல் எமது பூமியிலே விழுந்துவிட்டது. அது பெரிய சத்தமாக இருந்தது. உடனே எழுந்து எம்முடன் வாழும் மற்றைய விலங்குகளை காப்பாற்ற ஓடி வருகின்றேன் என்றது. அப்பொழுது அந்த முயல் தனது குட்டியையும் நண்பர்களையும் கூட்டிக் கொண்டு அந்த முயலின் பின் ஓடத் தொடங்கியது. வரும் வழியில் குரங்கு நரி, மான், யானை எல்லாம் அதன் கூட்டங்களோடு பின் தொடர்ந்து ஓடத் தொடங்கியது. அதன் சத்தத்தால் காடே அதிர்ந்தது. சிங்கம் தனது குகையில் உறங்கிக் கொண்டிருந்தது. அது எழுந்து நின்று யோசித்தது. என் முன் வருவதற்கு யாரிற்கும் தைரியம் இல்லை என்றது. யார் என் முன் வந்திருப்பார்கள் என்று யோசித்தது. அது தன் குகையை விட்டு வெளியே வந்து பார்த்தது. அந்தச் சிங்கத்திற்கு அதிர்ச்சியாக இருந்தது. அது குகையின் வாசலில் நின்று எல்லோரும் நில்லுங்கள் என்றது. ஆனால் அந்த மிருகங்கள் சிங்கத்தின் கதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சிங்கத்திற்குக் கோபம் வந்தது. அது உடனே ஒரு பாறையின் மேல் ஏறி எல்லோரும் நில்லுங்கள் அப்படி நிற்கா விட்டால் நான் எல்லோரையும் கொன்றுவிடுவேன் என்று கோபத்துடன் கத்தியது. அப்பொழுது எல்லா விலங்குகளும் அப்படியே நின்றன. அது கீழே இறங்கி யானை, மான், நரி, குரங்கு, முயல் என்ற எல்லா விலங்குகளிடமும் விசாரித்தது. அப்பொழுது யானை கூறியது, நான் மானிடம் கேட்டேன் என்ன நடந்தது, என்று கேட்க மான் கூறியது பூமி அழிகின்றது நாங்கள் தப்பிப்பதற்காக ஓடி வருகின்றோம் என்று என்னிடம் கூறியது.

சிங்கம் மானிடம் சென்று கேட்க மான் கூறியது நான் எனது உறவினர்களுடன் சந்தோசமாக கதைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது நரியார் தனது குடும்பத்துடன் ஓடிக்கொண்டிருந்தார். நான் நரியாரை மறித்துக் கேட்டேன் ஏன் நீங்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக் கிறீர்கள் என்று, அப்பொழுது நரியார் கூறினார் இந்த பூமி அழிந்து கொண்டு வருகின்றது நாங்கள் தப்பிப்பதற்காக ஓடினேன் என்றது. அதனால் நானும் தப்பிப்பதற்காகவே ஓடினேன் என்று மான் கூறியது. சிங்கம் நரியிடம் சென்று நடந்த வற்றை கூறியது. நான் உணவு தேடிக்கொண்டிருக்கும் போது குரங்குகள் ஓடி வந்தன. அவர்களிடம் ஏன் எல்லோரும் பயந்து ஓடி வருகின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு குரங்கு கூறியது. நரியார் உமக்கு விசயம் தெரியாது நாம் வசிக்கும் பூமி அழிந்து கொண்டு வருகின்றது. அதனால் நாங்கள் உயிர் பிழைப்பதற்காக ஓடுகின்றோம் நீங்களும் உமது உறவினர்களுடன் ஓடுங்கள் என்று கூறியது. அதன் பிறகு நானும் அவர்களுடன் சேர்ந்து பின் தொடர்ந்து ஓடத் தொடங்கினேன் என்று கூறியது. சிங்கம் குரங்கிடம் சென்று கேட்டது அதற்கு குரங்கு நான் மரத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன் அப்பொழுது முயல் தனது நண்பர்களுடன் ஓடி வந்தது நான் முயலிடம் கேட்டபோது முயல் கூறியது நாங்கள் உயிர் தப்ப ஓடிக்கொண்டிருக்கின்றோம் என்று சொன்னது. அப்பொழுது நான் அந்த முயலிடம் கேட்டேன் ஏன் என்ன ஆபத்து ஏற்பட்டது என்று அதற்கு முயல் விண்ணிலிருந்து ஒரு கல் பூமியை நோக்கி வந்து விழுந்து விட்டது நாங்கள் உயிர் பிழைக்க ஓடுகின்றோம் என்று கூறியது. அதனால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஓடினேன் என்று குரங்கு சிங்கத்திடம் கூறி முடித்தது. பின்பு சிங்கம் முயலிடம் சென்று கேட்க அந்த முயல் பயந்த முயல் தான் எமக்கு கூறியது என்று சிங்கத்திடம் அந்த முயல் கூறியது அப்பொழுது சிங்கம் அந்த முயலிடம் சென்று நடந்தவற்றை கேட்டது. அதற்கு அந்த முயல் நான் உயிர் பிழைக்க வேண்டும் என்னை விடுங்கள் என்று கூறியது. அப்பொழுது சிங்கம் அந்த முயலின் பயத்தை போக்கியது பின்பு சிங்கம் முயலிடம் நடந்தவற்றைக் கேட்டது அதற்கு முயல் நான் ஒரு மரத்தில் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது விண்ணிலிருந்து ஒரு கல் பூமியில் வந்து விழுந்ததை நான் என் கண்ணால் கண்டேன் என்று கூறியது. அப்பொழுது சிங்கத்திற்கு என்ன நடந்திருக்கும் என்று விளங்கியது. அது முயலை நீ எங்கே தூங்கியிருந்தாய் என்று சிங்கம் கேட்டது. அதற்கு முயல் கூறியது எமது காட்டின் நடுவில் இருக்கும் தென்னை மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டி ருந்தேன் என்று கூறியது சிங்கம் முயலைக் கூட்டிக்கொண்டு தென்னை மரத்தின் கீழ் சென்றது.

முயல் பயத்தால் தனது கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டது. சிறிதுசிறிதாக அது தன் கண்களைத் திறந்தது. அங்கு ஒன்றையும் காணாததால் முயல் திகைத்து நின்றது. அப்பொழுது சிங்கம் கூறியது நீ மரத்தின் கீழ் உறங்கி இருக்கும்போது மரத்தில் இருந்து தேங்காய் விழுந்தது அதன் சத்தத்தை நீ பூமி அழிகின்றது. என்று நினைத்துப் பயந்தது மாத்திரம் இல்லாமல் எல்லா விலங்குகளையும் பயப்படுத்தி விட்டாய் என்று கூறியது. அப்பொழுது முயல் தன் தவறை உணர்ந்து எல்லா விலங்குகளிடமும் மன்னிப்புக் கேட்டது. அதன் பின்பு எல்லா விலங்குகளும் சந்தோசமாகச் சென்றன.

**ர. நந்தினி**
**தரம் – 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

பத்து மாதம் சுமந்து என்னை
ஈன்றெடுத்த அன்னையே!
அவள் விட்ட கண்ணீருக்கும்
சிந்திய செந்நீருக்கும்
இணையில்லையே
உன் உதிரத்தை பாலாக்கி
உடம்பை உருக்கி - நன்றே
என்னை வளர்த்தாய் நீ
ஆயிரம் பிரச்சினைகள்
மத்தியிலும் எம்மைத் தளரவிடாது
பாதுகாத்தாய் வாழ்க நீ அம்மா.

த. ஜித்திகா
தரம் - 06

## அன்பு

ஒருவர் மீது அன்பு வைத்தால்,
அவரை விட்டு பிரிய மனம் வராது
அவரை விட்டு பிரிய முடியாது
அப்படிப் பிரிந்தால்
இதயமே மடிந்து விடும்
எனக்குள் இருக்கும் அன்பு
மிகவும் ஆழமானது
பிரிய நினைத்தாலும்
பிரிய முடியாதது - என்னால்
இந்த அன்பை விட முடியாது
அப்படி யாராவது என்னை விட்டு
பிரிக்க நினைத்தால் - இறைவன்
என்னோடு இருப்பான்.

ச.சர்மிலி
தரம் - 10

## கதிரையின் சுயசரிதை

எனது பெயர் கதிரை. நான் தளபாடக் கடையில் இருந்தேன். என்னை ஒருவரும் வாங்கவில்லை. நான் மிகவும் கவலையாக இருந்தேன். ஒருநாள் என்னை பார்த்து ஒரு அம்மா இந்த கதிரை என்ன விலை என்று கேட்டார். அந்தக் கடைக்காரன் இந்தக் கதிரையின் விலை ஐநூறு ரூபா என்று சொன்னார். அந்த அம்மா என்னை வாங்கி, வீட்டுக்குக் கொண்டு சென்றார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஒருநாள் அந்த அம்மாவின் மகன் என்னை உடைத்து விட்டார். எனக்கு வந்தபோது இருந்த சந்தோசம் இப்போது இல்லை ஏனெனில் நான் உடைந்து போய் குப்பைத் தொட்டியில் அனாதையாகக் கிடக்கின்றேன். எனது வாழ்கை இன்றோடு முடிந்து விட்டது.

ம. துஸ்யந்தினி
தரம் -09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பின் அம்மா

ஆண்டவன் அருளிய வேதம்
அம்மா என்னும் வடிவம்
அனைத்து உயிர்களும்
அம்மாவின் முகம்
அழித்தால் உயிர் இருந்தும் ஜடம்
அம்மா ஒரு நதி
இடம் பொருள் தெரியாத விதி
அன்பில் செல்லும் வழி
தாய் இல்லாததால்
உள்ளத்தில் வலி
அனைத்தையும் சொல்லித் தந்த தாயே!
உன் பிரிவில் வலியை
மட்டும் ஏன் சொல்லித் தரவில்லை
தனிப்பிள்ளை என்று அன்பைத் தந்தாய்
நீயே கடைசியில் - என்னை
விட்டுச் சென்றாய்.

வி.கௌசனா
தரம் - 11

## Myself

My name is Uthayakirushalini.
My mother's name is Sarojini.
My father's name is
Krushnarajah.
I have a sister.
Her name is Nithurshana.
I am studying at
J/Urumpirai Hindu College
My favourite food is milkrice.
I am twelve years old.
My favourite drink is
orange juice.
I have a pet dog.
I like drama and Theatre most.
I want to be a teacher one day.

*K. Uthayakrushalini*
*Grade – 07*

## அம்மா

பத்து மாசம் என்னை
சுமந்து பெற்றெடுத்த தாயே
பத்து நிமிடங்கள் கூட
என்னுடன் இல்லையே
உன்னை அழைக்கின்றேன் - நான்
காணாமல் துடிக்கின்றேன்
என் பக்கத்தில் வருவாயா தாயே
உன்னைக் காணமல் - என்
இதயம் மடிகின்றது - உன்
நிழலில் நடந்த நான்
இப்போது தனியாக நடக்கிறேன்.
உன் நிழல் எங்கே
என்று ஏங்குகின்றது
என் உள்ளம் கேள்வி எழுப்புகின்றது.
உன்னை விட்டு என்னால்
வாழ முடியவில்லை தாயே
என் அருகில் வருவாயா
காத்திருக்கின்றேன்.

ஜெ. ஜெகதா
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கனவு

அது ஒரு காலைப்பொழுது செங்கதிர் பரப்பிக் கொண்டு சூரியன் கிழக்கு வானில் தகதகவென உதித்தது. புறவைகளின் இசை மனதை அலைபாய வைக்கும் நேரம் அவ்வேளை கடலில் துள்ளிப் பாய்ந்த வண்ணம் கடற்கன்னி மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தது. அவ்வேளை நான் கடற்கரைக்கு விளையாடுவதற்கு வந்தேன். அக்கடற் கன்னியைப் பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கி கடற்கன்னி விளையாடிக் கொண்டிருப்பதை இடைவிடாது உற்றுப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தேன். அக்கடற்கன்னி என்னைப் பார்த்தாள். பார்த்தவுடன் என்னை அழைத்து ஏன் என்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாய் என வினவினாள். உனது அழகினை இரசித்து உன்னைப்போல் நான் இருந்தால் எவ்வாறு இருப்பேன் என யோசித்துக் கொண்டிருந்தேன் என்றேன். அதற்காகவா என்னை உற்றுப் பார்த்தாய் எனக் கூறிய படியே சிரித்தாள்.

பின் கடலிற்குள் சென்று உடனே ஒரு கோலை எடுத்து வந்து இது ஒரு மந்திரக்கோல் இதை உன் உடம்பின் மேல் தொட்டு மந்திரம் சொன்னால் நீ எனது உடம்பு போன்று வரலாம் நீ இப்போ உனது இரு கண்களையும் மூடு என்று சொல்லி அந்த மந்திரக் கோலை என் உடம்பின் மேல் வைத்தாள். பின் அவளைப் போன்ற உடம்பினைக் கொண்டிருந்தேன். இது உண்மையா அல்லது கனவா என்றும் ஒரு சந்தேகம். ஆனால் இது உண்மையாகத் தான் இருக்கும் என நினைத்து கடற்கன்னி உனக்கு நான் நன்றி சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை என்று கூறி முடிக்கும் முன் நீ அதிகம் சந்தோசப்படாதே பேராசை பெருநட்டம் என்று கூறி நீ இக்கடலிற்கு மேல் வந்தால் உனது பழைய உடலாய் மாறிவிடுவாய் என்று கூறி, கடற்கன்னி சிறிது தூரம் அவ்விடத்தை விட்டுச்சென்று விட்டாள். இது தானா நான் பயந்தே விட்டேன், என்று எனது மனதிற்குள் நினைத்து சந்தோசத்தில் கடலிற்குள் சென்றேன். அப்போது எனது நண்பர்கள் அக்கடற்கரைக்கு வந்தார்கள். நான் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் கடற்கன்னி முதல் கூறிய விடயம் நினைவுக்கு வரவில்லை நான் உடனே கடலின் மேல் குதித்து எனது நண்பர்களை பார்ப்பதற்கு அவர்களை தேடிக் கொண்டிருந்தேன். அந்தக் கணம் தான் அக்கடற்கன்னி கூறிய விடயம் நினைவிற்கு வந்தது. அப்போது அம்மா எனது உடம்பு என்று பெரிய சத்தமாக கத்தினேன்.

நான் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். அப்பொழுது தான் உண்மை விளங்கியது. நான் இவ்வளவு நேரமும் கண்டது கனவு என்று, எனது கனவு நனவாகி இருந்தால் எவ்வாறு இருக்கும் என யோசித்து சிரித்தேன்.

**த. டிசாளினி**
**தரம் - 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. உலகிலேயே தேசியக்கொடி இல்லாத நாடு எது? மாசிடோனியா

02. கீரை வகைகளின் தாயகம் எது?
இந்தியா

03. பூமியின் புவியீர்ப்பு விசையிலிருந்து விடுபட எவ்வளவு வேகத்தில் செல்ல வேண்டும்? 40, 000km

04. உலகின் மிகப்பெரிய எண்ணெச் சுரங்கம் எது?
காவர் (சவுதி அரேபியா)

05. பாம்புகள் இல்லாத தீவு எது?
ஹவாய்த் தீவு

ம. சாருபா
தரம் - 11

01. கறுப்பு தண்ணீர் காய்ச்சல் என்று அழைக்கப்படும் நோய் எது?
மலேரியா

02. மரங்களில் சிற்பம் செதுக்கும் கலைக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்? ஸைலோ கிராமி

03. அல்லிப் பூக்களின் தாயகம் எது?
கனடா

04. மாறுகுரல் உடைய ஒரே பறவை எது? குயில்

05. மனித மூளையில் எத்தனை நரம்புகள் குறுக்கு. நெடுக்காக ஓடுகின்றன?
1200 கோடி நரம்புகள்

ஜெ. ஜெனிற்றா
உயர்தரம் - 2020

# அம்மா

எனது அம்மா அழகான அம்மா
பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா
என்னை பாதுகாத்தவளும் அவளே
நான் உங்களுடன் கூடவே வருவேன்
எனது அம்மாவை கடைசி வரை காப்பேன்
எனது மகிழ்ச்சி எல்லாம் அம்மா தான்
எனது அம்மா எனது கடவுள்.

சோ. அனோஜா
தரம் - 09

# அம்மா

எனது அம்மா அழகானவர்
எனக்கு வேண்டியவற்றை செய்வார்
எனக்கு அம்மாவை நிரம்பப் பிடிக்கும்
என்னை மிகவும் பாசமுடன்
அரவணைக்கும் அம்மா
அம்மாவின் அன்பிற்கு இணையேதும்
இவ்வுலகில் இல்லை.

யூ. சுகந்தினி
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த கையடக்கத் தொலைபேசி

நான் ஒரு கையடக்கத் தொலைபேசி நான் ஜப்பான் நாட்டில் பிறந்தேன். எனது நண்பர்களோடு சந்தோசமாக இருந்தேன். இப்போது என்னை ஒருவன் வேண்டினான். என்னை அவர் தன் வீட்டிற்கு கொண்டு செல்ல ஆயத்தமானார் அப்போது எனக் மிகவும் கவலையாக இருந்தது. எனது நண்பர்கள் என்னை பார்த்து கவலை அடைத்தார்கள். பிறகு அவர் என்னை எனது ஊரில் இருந்து வேறு ஊருக்கு கொண்டு சென்றார். அப்போது அவர்களின் வீட்டில் பெரிய கொண்டாட்டம். அப்போது என்னை அவர் தனது மகனின் பிறந்தநாளிற்கு பரிசாக கொடுத்தார். அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் என்னை வேண்டினார். பிறகு அவர்களது கொண்டாட்டம் எல்லாம் முடிவடைந்து விட்டது.

அவர் என்னை சந்தோசமாக விளையாட்டு விளையாடினான். பிறகு அவர் என்னை பயன்படுத்திவிட்டு வைத்து விட்டார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பிறகு நேரம் சென்றுவிட்டது. அந்த தருணம் என் வாழ்வில் பெரிய இடி விழுந்து விட்டது. காரணம் என்னை அவர் வைத்து விட்டு சென்ற போது, ஒரு பூனை என் அருகில் வந்து என்னை தட்டி வீழ்த்தி விட்டது. நான் அத்துடன் சரிபாதியாக உடைந்து விட்டேன். எனது வாழ்க்கை முடிந்து விட்டது. பிறகு அவர் என்னை பார்த்து விட்டு கவலை அடைந்தார். மறுநாள் என்னை கடையில் கொடுத்தார். அவர் இனி என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று கொடுத்துவிட்டார் .அவர் என்னை வீட்டிற்கு கொண்டு சென்று ஒரு பையில் போட்டு அப்படியே வைத்து விட்டார். அன்றே என் வாழ்க்கை முடிந்து விட்டது.

ம.சங்கீதா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த வீடு

நான் கொழும்பிலுள்ள ஒரு அழகிய கிராமத்திலே மிகவும் பெரிய வீடாக காணப்பட்டேன். அங்கு ஒரு பரம்பரைக் குடும்பமே வந்து என்னை மிகவும் நன்றாக மாபிள் பதித்து பல வர்ணங்களை என்னில் பூசி, என்னை மிகவும் அலங்கரித்தனர். நான் மிகவும் உயர்ந்த வீடாக காணப்பட்டேன். அவர்கள் என்னை மிகவும் சுத்தமாக வைத்திருந்தார்கள். ஒரு கிழமையில் மூன்று தடவைகள் கழுவி என்னிலுள்ள அழுக்குகளை துடைத்து, என்னை மிகவும் சுத்தமாக வைத்திருந்தனர். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்நது. நான் அவர்களை மழை, வெயில், குளிர் என்பவற்றில் இருந்து பாதுகாத்து வந்தேன்.

அவர்கள் என்னில் மிகவும் அக்கறை செலுத்தி வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் வெளியூர் போவதற்காக என்னை பக்கத்து ஊர் ஒருவரிடம் ஒப்படைப்பதாக கூறினார். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஒருநாள் என்னை அவர்களின் கையில் ஒப்படைத்தார். அவர்கள் எனக்குள் வந்திருந்தார்கள் என்னை அவர்கள் ஒழுங்காக கவனிப்பதில்லை எனக்கு மிகவும் கவலையாக இருந்தது.

என்னை அவர்கள் சொந்தமாக என்னை பார்ப்பவரிடமே ஒப்படைத்து விட்டார்கள் சில நாட்கள் கழிந்தன. என்னில் பல வெடிப்புக்கள் ஏற்பட்டு என் கூரைகள் பாதியின்றி இருந்தன. எனது வர்ணங்கள் எல்லாம் உரிந்து என்னைக் கழுவுவதற்கு யாருமின்றி, இருந்தே என்னில் வசிப்பவர்கள் கூட சரியாக கவனிப்பதில்லை அவர்கள் தாம் முதலிருந்த வீட்டிற்கு சென்று விட்டார்கள். நான் அநாதையாகக் காணப்பட்டேன். திடீரென ஒருநாள் பெரிய புயல் காற்று வீசியது எனது கூரைகள் எல்லாவற்றையும் தூக்கிச் சென்றுவிட்டது. நான் மிகவும் வருத்தத்துடன் இருந்தேன். மழையானது பெய்துகொண்டிருந்தது எனது கற்களெல்லாம் உடைந்து விழுந்தது. நான் இப்போது ஏங்கிக்கொண்டிருக்கின்றேன் யார் என்னை காப்பாற்றுவார்களென்று அப்போது ஒரு கணம் யோசித்தேன் எனக்கு ஏற்பட்ட நிலை யாருக்கும் ஏற்படக்கூடாது என்று, பாழடைந்த வீடு தன் கதையை கூறியது.

**க. டிலக்சனா**

**தரம் – 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறுவதற்கு தடையில்லை

ஒரு அழகிய கிராமத்தில் ஒரு அழகிய குடிசையில் தாயை இழந்த ஏழை சிறுமி கீதா வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள். முதலாவது ஆதியும், இரண்டாவது சிந்துவும் இருந்தார்கள். வறுமையின் காரணமாக கீதாவால் சக மாணவர்களைப் போன்று பள்ளி சென்று படிக்க முடியவில்லை. ஆனால் கீதா உள் மனதில் தான் படிக்க வேண்டும் என்று ஆசை இருந்தது. ஆனால் கீதாவால் எப்படி படிக்க முடியும்? ஏனென்றால் அவளது தாயாருக்கு இரண்டு கால்களும் இல்லை. அதனால் அவள் தான் அந்த குடும்பத்தை நடத்த வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. ஆனாலும் அவள் படிக்கும் ஆர்வத்தை விடவில்லை. அவள் பாடசாலை நூலகத்திற்கு சென்றபோது ஒரு கதைப்புத்தகம் இருந்தது. அந்த புத்தகத்தின் தலையங்கம் "வறுமை முன்னேறுவதற்கு தடையில்லை" அந்தப் புத்தகத்தில் அவளைப் போன்ற சிறுமி இருந்தாள். அவளும் கஸ்ரப்பட்டு படித்து முன்னேறினாள்.

அவள் இனி என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தபடி சென்று கொண்டு இருந்தாள். அந்தப் பாதையில் ஒரு பெரியவர் நடக்க முடியாமல் நடந்து வந்தார். அவள் அந்தப் பெரியவருக்கு உதவி செய்தாள். அந்தப் பெரியவர் அவளைப் பற்றி விசாரித்தார். அவள் தன் வாழ்கை வரலாற்றைக் கூறினாள். அந்த பெரியவர் அவளுக்கு உதவி செய்ய வரும்பினார். அவளை அந்த பெரியவர் படிக்க வைத்தார். அவள் படித்து நல்ல நிலையை எய்தினாள். ஒரு அனாதை இல்லம் கட்டி, அதற்கு கருணை இல்லம் என்று பெயர் வைத்தாள். தன்னைப் போல் கஸ்ரப்பட்ட பிள்ளைகளும் இணைந்து படிக்க உதவினாள். அவள் அதன் ஊடாக மகிழ்ச்சி அடைந்தாள்.

த. தனுசியா
தரம் - 11

## My Shadow


I have a Little shadow that goes
in and out with me
And what can be the use of him
is more than I can see
He is very, very like me from
the heels up to the head
And I see him jump before me
When I jump in to bed

***P. Shathana***
***Grade - 09***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டபத்தின் உட்புறத் தோற்றம்.

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்லம்,
பலாலி வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 223 0778
web : www.hinduboard.org
Facebook : Hindu Board

Karunai Illam of the Hindu Board of Education,
Palaly Road, Urumpirai, Jaffna.
e.mail : hinduboard_edu@yahoo.com,
hinduboard.edu@gmail.com

Donations: Hindu Board of Education,
C/A No. 075440851,
Bank of Ceylon, Thirunelvely. (761)

Guru Printers, Thirunelvely.
021 222 8266, 021 221 4777

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org